சகல டிராமா ஆக்டர்களும்
பாடி நடத்திவரும்

ஞானசவுந்தரி



சென்னை: முத்தியாலுப்பேட்டை, பாலசந்த்ரச்சாபக்கலி.

V. A. தியாகராஜ செட்டியார்கள் இயற்றியது.

...ன்னை முத்தியாலுப்பேட்டை,
...காராஜ செட்டியார் பதிப்பு.

1934. [விலை அணா 4]

அர்ச்சிஷ்ட ஆடைசப்பர் துவே. 1

P. S. வேலு நாயர், K. S. அனந்தநாராயணையர்,
K. S. செல்லப்ப அய்யர், S. G. கிட்டப்பா,
K. B. சுந்தராம்பாள், P. S. கோவிந்தன்,
C. S. சாமண்ணு அய்யர், S. V. சுப்பையா பாகவதர்,
N. V. தியாகராஜ பாகவதர்,
மதுரை பால மீன ரஞ்சினி சங்கீத சபையார்
இன்னும் பல நடிகர்களும் நடத்திவரும்

ஞானசவுந்தரி டிராமா.

௨

நாடகாசிரியர்:—
சென்னை, முத்தியாலுப்பேட்டை
பாலசந்தச்சரபக்கனி
V. A. தியாகராஜ செட்டியாரவர்களால்
இயற்றப்பெற்றது.

மேற்படி
V. A. தியாகராஜ செட்டியாரவர்களால்
பிரசுரிக்கப்பெற்றது.

ரைட்] 1934 [விலை அணா 4

நாடக பாத்திரம்.

1 தர்மராஜன். ... ... உரோமாபுரிக்கதிபன்
2 ஞானசவுந்தரி. ... ... தர்மராஜனின் திருச்செல்வி.
3 லேனாள். ... ... தர்மராஜனின் 2-வது மனைவி.
4 சுல்தான். ... ... துருக்கிநகர்க்கதிபன்.
5 சிமியோன் ... ... எகிப்து தேசமன்னன்.
6 மதலை. ... ... சிமியோனின் மனைவி.
7 பிலேந்திரன் ... ... சிமியோனின் புத்திரன்.
8 ஏசுநாதன்.
9 ஆசைநாதன். } ஞானசவுந்தரியின் புத்திரர்கள்.

மற்றும்,

குடிகள், பாதிரியார், சம்மன்ஸ், தேவமாதா, மந்திரிகள், சேவகன், பாங்கியர்கள், கோலியாளிகள், சேனாதிபதி முதலியோர்.

நாடகம் நிகழிடம்.

4-வது சீனில்:—ஞானசவுந்தரியை லேனாள் பலவித துன்பப் படுத்துமிடத்திலும்.

8-வது சீனில்:—ஞானசவுந்தரி இருகரத்தையுமிழந்து புலம்புமிடத்திலும்.

23-வது சீனில்:—இருகரமுமில்லாத ஞானசவுந்தரி தனது இரண்டு குழந்தைகளுடன் வனத்தில் புலம்பிக்கொண்டிருக்குமிடத்திலுமாம்.

ரிஜிஸ்டர் அறிக்கை.

குசையப்பர் துணை.

ஞானசவுந்தரி ட்ராமா.

குசையப்பர் துதி வெண்பா.

வானவர் போற்றும் வண்மை யதிற்சிறந்த
ஞான சவுந்தரியின் நற்சரிதை—யானெழுத
அர்ச்சிஷ்ட குசை யப்பா வுனைத்துதித்தேன்
தட்சண மருளெனக்குத் தா.

குசையப்பர் துதி.

ஸ்ரீராமபாதமா நீகிருப என்றமெட்டு.

பல்லவி

தேவாதி தேவனே தெய்வீக யோகனே
தினாசதக தியானனே ஆ ஆ தே

அநுபல்லவி

ஆவலாய் போற்றினேன் அருள் குசையப்பனே
ஆதரித்திட வருவாய் வேதனே பொற்பாதனே தே

சரணம்

தேங்கிடும் தொண்டர் குறை தீர்த்த சகாயனே
தேசத்தில் கண் கண்ட தெய்வ மாய் விளங்கும் நேயனே
தேடி நின்றேனே
தின முனை தானே
காங் ராஜனின் சமர்த்த தியான மோன நாதனே தே

சீன்:—1] [இடம்:—நந்தவனம்.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, பாங்கியர்கள்.

[ஞானசவுந்தரி பாங்கியர்களுடன்
நந்தவனத்திற்கு வருகிறாள்.]

ஏனோ என்னை எழுப்பலானாய் மடமானே என்றமெட்டு.

ஞான. நந்தவன விநோதம் பாரீர் பாங்கிமாரே
நறுமலர் வாச மிகுந்த நல்வனத்தின் சீரே ந

பாங். இவ்வனம் போலிப்புவியி லெங்குமிராதம்மா
இந்த்ரலோக நந்தவன் மிதற்கீடென்னலாமா இ

ஞானம். வ-ம்:-அடி! இந்த நந்தவனத்தின் விநோத விசித்ரவடி வழகினை கவனித்தீர்களா? ஆஹா! இவ்வனத்தின் வாயற்படி யருகில் வரும்பொழுதே இத்தகைய பரிமளம் வீசுவதென்றால் உட்சென்று அம்மலர்களைக்காண்போமாயின் அதின்வாசம் எத்தகையதாக இருக்கலாம்? அடி! இது தான் இப்படியென்றாலோ? அதோ அந்த மல்லிகைக்கொடி சுற்றிப்படர்ந்திருக்கும் அந்த,

ஞானசவுந்தரி ஷை மெட்டு.

மாமரத்தின் மீது குயில் மகிழ்ந்து கூவுதோடி-அதின்
மார்க்கமதை கண்டு வர்ண மயில்களாடுதோடி ந

பாங். வ-ம்:—அம்மணி! அதுதானா? அதோ பார்த்தீரா?

பாங்கியர்கள் ஷை மெட்டு.

பக்கத்திலோர் நீர்நிலை பாரும் பாரும் தாயே
பறந்திடும் ஜெந்துக்கள் கூட்டம் பலவுண்டறிவாயே இ

பாங். வ-ம்:—அம்மணி! அதோ பார்த்தீரா அந்த நீர்நிலையின் அழகை? அதனருகிலிருக்கும் பளிங்குகல் மேடைமீது பலவிதமான பக்ஷிகள் வந்து நீரில் மூழ்குவதும், சிலது கீதங்கள் பாடுவதும், மற்றும் சிலது நீரைவட்டமிட்டு பறந்து நிலத்தில் அமர்வதும், சில பக்ஷிகள் நீரில் குளிப்பதும் பார்க்கப்பார்க்க எவ்வளவு மநோரம்யமாய் விளங்குகின்றது பார்த்தீரா? தாயே! வாருங்கள், நாமும் சென்று அவ்வோடையி லிறங்கி சற்று ஜலக்கிரீடை யாடலாம்.

ஞானம். வ-ம்:—அடி! சகி! இந்த புஷ்பச்செடி வர்க்கங்களை கவனித்தனையா? ஆஹா! புஷ்பவகையிலும் இத்தனைவிதம் இருக்குமென எனது சொப்பனத்திலும் நினைத்த தில்லையே? இதுவென்னடி ஆச்சரியம்!

ஞானசவுந்தரி டை மெட்டு

செண்பகம் பாரிஜாதம் சொகுசுள்ள இருவாட்சி
சிவந்த ரோஜா சூர்யகாந்தி சரக்கொன்னைமலர் சூகுமி 5

ஞானம். வ-ம்:—அடி! இதின் வளப்பங்களை வர்ணிக்கவேனு மாயின் இப்பொழுதே இடந்தராது. தவிர அதிக நாழிகையாயினும் எனது சிற்றன்னையார் கோபித்துக்கொள்வார், வாருங்கள் அதோ அந்த தடாகத்திற்குச்சென்று நீராடி அதிசீக்கிரத்தில் அரண்மனைக் குச்செல்வோம்.

பாங். வ-ம்:—அப்படியே செய்யலாம் வாருங்கள் தாயே!

[போகிறார்கள்.]

சீன்:—2] [இடம்:—ரோமாபுரி தர்பார்.

கதாநாயகர்:—தர்மராஜன், மந்திரி, குடிகள், சேவகன்.

தர்மராஜன் தரு.

தாண்டவமிடும் மாமயில்வீரா என்றமெட்டு.

பல்லவி

ஆண்டருள் புரிவாய் லக நாதா
அடியேன் மேல் வாதா ஆ

அநுபல்லவி

மாண்டாயன்று மக்களின் நன்மைக்காய்
மாசிலுலை தன்னைமந்த விரதகதா பரிவுடனே ஆ

சரணங்கள்

பாதகனும் யுவ காசின் சதியாலே
பற்பல பாடுகள் பட்டேர் புவிமேலே
சாதகமாய் மாண்ட மூன்றும் நாளிரவிலே
சத்யமாய் குழிவெடித்து நித்தியமாய் வந்தவரே ஆ
பூவினிலுந்தனை போற்றாதவரில்லை
புண்ணியம்பெற்றிட வேறுமார்க்கமில்லை
ஆவலுடனேநாடும் தியாகராஜன் சொல்லை
ஆதரிப்பீர் *நீதமுடன் வேதபோத நாயகனே ஆ

தர். வ-ம்:—அமைச்சர்காள், கல்யாண்! அதாவது, யான் இந்த ரோமாபுரியைச் செங்கோல் செலுத்தும் முறையில் நீதிதவராமலும், திர்ணயப் பிசகாமலும், குடிகளிடம் அன்பு மிகசெலுத்தியும், பல பெரியோர்களின் ஆசீர்களைப்பெற்றும், நாளுக்கு நாள் மேம்பாடாக அரசுபுரிவது அந்த சாக்ஷாத் சர்வேஸ்வரனின் கிருபாகடாக்ஷமே யாகும். ஆயினும், யான் இந்த தர்பாரினிடமாகவந்ததும் அர்ச்சிக்கிட ஏசுகாதனை துதித்து நின்றேன், ஆனால் என்னை அருந்தவத்திலின்

றெடுத்து என தன்பிறப்புக்கு காரணபூதமாய் விளங்காநின்ற எனது தாய் தந்தையர்களை சற்றுதுதிக்கலாம்.

தர்மராஜன விருத்தம். இராகம் பைரவி.

தன்மையாய் யென்னைமெத்த தவமதில பத்துமாதம்
பின்னமில்லாச் சுமந்து பெற்றமே இந்தராஜயம்
அன்புடனுளச்செய்த அன்னை தந்தையரேயுங்கள்
பொன்றிரு வடியைமைந்தன் போற்றினேன் போற்றினேனே.

தர். வ-ம்:—ஆயினும், மந்திரிகாள்! என்னையின்றோர்களின் கருணையையும் பெற்றேன். தவிர, தற்போது என்மனதினிடமாக ஓர் வித நோக்க மேற்பட்டுள்ளது, அதின் கருத்துகளை உங்களைக் கொண்டே தெரிந்துக்கொள்ளலா மென்பது எனது கொள்கை. ஆதலால்,உங்களின் மனவிருப்ப மெவ்வாரோ?

மந். வ-ம்:—மன்னவா! அக்கொள்கையை யுரைப்பீராயின் இஞ்சிற்றேனும் தியக்காது விடையளிக்கக்கடமை பூண்டிருக்கிறோம்.

தர். வ-ம்:—சபாஷ்! சந்தோஷம்.

மார்க்கத்திற்கண்டகனி என்றமெட்டு.

தர். பரிவுடன் பாதிரி மார்கள் காலை மாலை
பூஜை புரிகின்றாரா அதை
கருத்துடனே நம் குடிகளனைவரும்
கண்டு சேவிக்கின்றாரா ப

மந். வ-ம்:—மன்னுநீதி மன்னவர் போற்ற இம்மானிலத்தை யாளும் மகிபா! புண்ணியத்திற்சிறந்த கண்ணியராகிய தாங்கள் குறையின்றி நன்றிபாராட்டத் தக்க முறையில் ராஜரீகம் புரிந்துவரவும், இப்பாரினுள்ள பிரஜைகள் அனைவரும் தங்களின் கொள்கைப் படியே.

மந்திரி ஷை மெட்டு.

காலை மாலை இரு வேளையிலும் பூஜை
கருத்துடன் பாதிரிமார் செய்ய
சீலமுடனே நம் குடிகளும் பூசித்து
சிறப்புடன் வாழ்கின்றார் கர

தர். வ-ம்:—சபாஷ்! மந்திரி! மநுநீதி தவறாத ராஜியத்தில் மதியில் மிகுந்த மந்திரிகள் இருக்கவேண்டு மென்பது உன் பொருட்டே அறிந்தேன். ஆயினும் இன்னுமொன்று, அதாவது

தர்மராஜன் தரு.

சருளிமலை மீதுமேவும் சிலை என்றமெட்டு,

வருணனவன் மாதந்தவ ராது மழை
வருஷிக்கின்றானே எனக்கே போது அதின்
வியாமதை யரிய மனமது கொண்டேனே வீட்
போது சொல்வீர் கோது வ

மந்திரி தரு மெட்டு.

மாதந்தவராது மழை பொழிந்து அதின்
மார்க்கத்தால் செந்நெல்விளைவு கொழிந்து அதை
மட்டின்றி நமது ஜெனம் வைத்து ஜீவிக்கின்றார் பஞ்ச
மழிந்து தூய ரொழிந்து மா

தர். வ-ம்:—மந்திரி! சபாஷ்! சந்தோஷம். இதுவனைத்தும் அவனொருவனின் செயலேயாகும். ஆனால் மற்றொன்று.

தர்மராஜன் தரு.

பாலாபிஷேகப் பழனிமலையப்பன் என்றமெட்டு,

வர்த்தகர் யாவரும் வகையுடன் கூடி
வல்லமையாய்தன் வியாபாரத்தை நாடி
அற்பமனதின்றி அன்புகொண்டாடி
அவர்நடத்தும் முறை உரைப்பீர் முன்னாடி வ

தர். வ-ம்:—மந்திரி! நமது நாட்டில் வசித்து வாராநின்ற பலவித மான வியாபாரிகளும், பகையின்றி அவரவர் வியாபார விஷயத்தில் பயபக்தியுடன் நீதிதவாறு சொற்பலாபத்திற்கே தொழில்முறையை நடத்தி வருகின்றனரா?

மந். வ-ம்:—அரசே! எல்லாம் தங்களின் மனதுபோலவே நடந்துக்கொண்டிருக்கிறது.

தர். வ-ம்:—சந்தோஷம் மந்திரி! இதுவனைத்தும் நமையாளும் இறைவன் செயல் (சற்று கவனித்து) அடே! சேவக்.

சேவக். வ-ம்:—வந்தனம் மகராஜ்!

தர். வ-ம்:—அடே! வெளிப்புரத்தில் ஏதோ அபயக்குரல்கேட்கின்றது, நீ அதிசீக்கிரத்தில் சென்று இங்கழைத்து வருவாய்.

சேவ. வ-ம்:—அப்படியே சித்தம்.

[சேவகன் போகிறான் குடிகள்
கூச்சலிட்டு வருகிறார்கள்.]

கோயிலைத்தோட்டத்திலே என்றமெட்டு.

மன்னவா என்னசெய்வோம் மிக
மனத்துயராகுது வனத்திலுள்ள பொல்லா

துன்மார்க்க சிங்கம் புலி — யானை
சிறுத்தைக் கரடியும் — பெருத்த மிருகமே
காட்டினுள்ளே புகுந்து — ஐயோ
காய்கனியிட்ட பயிர் — ஓங்கிட ஒட்டாமல்
கூட்டமுடனழித்து — நாங்கள்
குடிக்கவும் கஞ்சி — யில்லாமல் வருந்திட
நாசமாய் செய்ததையா — இந்த
மானிலத்தில் எங்கள் — மேனி மெலிந்திட
தோஷங்கள் என்ன செய்தோம் — அதனை
தொலைக்கா விடிலிந்த — ஊரில் வாழோம் வாழோம் ம

குடி. வ-ப்:—பராக்கிரமத்திற் சிறந்த இப்பாரை அரசுபுரியும் மன்னவா! இனி யெங்களால் இத்துயர் படமுடியாது, எங்களை இம்சித்த அப்பாழும் மிருகங்களை வதைத்தெரிந்தாலொழிய இவ்வூரில் வாழ்ந்திரோம்.

தர். வ-ப்:—குடிகளே! இது விஷயத்தில் கிஞ்சிற்றும் தியங்க வேண்டாம். யானிப்போதேசென்று அக்கொடிய விலங்கினங்களை வதைத்து உங்களின் துயரகற்றி ஆதரிக்கின்றேன், அனைவரும் அவரவர் மனைக்குச்செல்லுங்கள்.

[குடிகள் போகின்றனர்.]

சீன்:—3] [இடம்:—லேனாள் அந்தபுரம்.

கதாநாயகர்:—லேனாள், ஞானசவுந்தரி, தர்மராஜன்.

[லேனாள் தனிமையாய் பாடிக்கொண்டிருக்கிறாள்.]

செந்தூர் வேலாண்டி என்றமெட்டு.

பல்லவி

அன்னை மரியாயே — எனை
ஆதரித்திடுவாயே — எந்தன் — அ

அநுபல்லவி

உன்னையல்லாது அனை — உலகில் காப்போர் யாரெனை
உருகியே உளம் — கருகி வாடுறேன்
அருகிலே இருந் — திருவருள்புரி — அ

சரணங்கள்

ஆதியான பரஞ் — சோதி ஏகதனை
நியாதியா யடைத்த — நீதிசேர்சுந்தரி — அ
அடுத்த பேர்க்கருள் — கொடுத்திடும் பெரு
திடத்துள உனை — அடுத்தேனுதரி — அ

சரணம்

தன்மை மிகுந்தவனே
தயக்க மொழிந்தவனே
தாய் மரியே சிறு சேய் தியாகராஜனின்
நேய மிகுந்தமி மேகவி யோதினேன் அ

லேனாள். வ-ம்:—நான் அந்த திருகேத்ராபுரியின் மன்னனுக்கு திருச்செல்வியா யவதரித்து, சிலகாலம் வரையில் சிறுமியாகவே இருந்து, பிறகு எனது பெற்றோர்களின் அனுமதிக்கிணங்கி கல்வி கற்று, பிறகு பருவபக்குவ மடைந்து யான் அரண்மனையில் தங்கியிருக்க என்தன்னை தந்தையர் எனது வாலிபதிசையை சற்றேனு முணராது இந்த வயது தளர்ந்த கிழவனாகிய இந்த ரோமாபுரி மன்னனுக்கு என்னை இரண்டாவது தாரமாக விவாகம் முடித்து வைத்தனரே? எனது விவாகம் தான் ஒருவாறு பொருந்த மற்ற விவாகமென்றாலோ, எனது சக்களத்தி மகளாகிய அந்த ஞானமிருக்கின்றாளே அந்த புழுக்கைச் சிறிக்கிக்கு பணிவிடை புரிவதில் எனதாவி உண்டில்லையென்று போகின்றது. இப்பாதகிக்கு நான் எவ்வளவுதான் பணிவிடை புரிந்தாலும் என்னேரம் பார்த்தாலும் எனது பத்தாவிடம் கோள் குண்டுணித்தனம் செய்துக்கொண்டே இருக்கிறாள். இந்த கழுதைகளுக்கு உழைக்கதானா என்னை புத்திரியாக அடைந்தார்கள் எனது பெற்றோர்கள் ?

[தர்மராஜன் பிரவேசம்.]

தர். வ-ப்:—கண்மணி! லேனா! என்ன? ஒருவித முகவாட்டத்துடன் அமர்ந்திருக்கின்றாய் ?

லேனாள். வ-ம்:—பிராணபதி! எத்தகைய இடர்களுக்கும் இறைவன்போல் தாங்களிருக்க எனக்கென்ன குறை இருக்கின்றது?

தர். வ-ப்:—கண்ணே! அதின் பொருட்டுதான் என்மனமும் ஒருவாறு திடுக்கிட்டது. ஆயினும், உனது மனக் கொள்கையை யுணர்ந்த பின்னர் எனது மனம் ஒருவாறு அமைதியுற்றது. ஆயினும்,

தர்மராஜன் விருத்தம். இராகம்—சங்கராபரணம்.

நல்லது யெந்தன்மானே நமதுநா டதின்ஜெனங்கள்
தொல்லையே மிகசெழிக்கச் செய்திட மிருகங்கள்தான்
சொல்லொணா துயர்க்குள்ளாக்கி சென்றதாம் யானுமேகி
கொல்லவே விடையெனக்கு கொடுத்திடாய் என்தன்மானே.

தர். வ-ம்:—யான் வனந்திரமேகி விலங்கினங்களை வதைத்தெரிந்து பிரஜைகளின் வருத்தங்களைத்தீர்த்து வரும்பொருட்டு யான்சென்று வருகிறேன். சீக்கிரம் விடைதா.

லேனாள். வ-ம்:—இதென்ன பிராணபதி? இத்தகைய விருத்தாப்பிய பருவத்திலுமா வேட்டையாடச் செல்லவேண்டும்? ஏன்? தங்களிடம்சேனாதி போர் வீரர்கள் யாருமில்லையா என்ன, அவர்களை அனுப்புகிறது தானே ?

தர். வ-ம்:—காதலி! அப்படிக்கல்ல! குடிகளின் குறையை அரசனிடம் தெரிவித்தால், அக்குறையை அரசனல்லவோ அகற்ற வேண்டும்? அதை விடுத்து அவ்வாபத்தை ஏவலாளிகளால் தீர்க்கப்படுமா? ஆதலால், யான் சென்று இன்னும் மூன்று நாளைக்குள் வருகிறேன். எங்கே குழந்தை ஞானம்? இப்படி வரவழை.

லேனாள். வ-ம்:—என்ன நாதா! குழந்தையை தாங்களே இப்படி கெடுத்து விடுகின்றீரோ? தாங்களுக்குதானா அவள் குமாரியாக ஜெனித்தாள்? எனக்கு மாத்திரம் அன்னவளைவிட யார் இருக்கின்றார்கள்? அவள் விஷயத்தில் தங்களுக்கிருக்கும் உரிமை எனக்கில்லையா என்ன? நான் பெற்றால்தானா பிள்ளை? எனது சக்களத்தி யார் பெற்றால் அது எனக்கு பிள்ளையல்லவா? அப்படிக்கிருக்க யான் அன்னவளுக்கு தக்கபடி சம்ரக்ஷணைகளைப் புரிந்து காப்பாற்றுகிறேன். தாங்கள் சென்று வாருங்கள்.

தர். வ-ம்:—ப்ரிய சகி!

சத்திய மெங்கும் புகழும் நாடு என்றமெட்டு.

அப்படிக்கல்லடி மட மானே என
தாசைக் கிசைந்த செழுந் தேனே இதை
எப்படி யாகிலு ஞானந் தானே கேட்டால்
ஏங்கிப்புலப்புவாள் சொன் னேனே அ

தர். வ-ம்:—குழந்தையோ? மிகவும் சிறுமி! அன்னவளின் தாய் உயிர் துறக்குங்கால் ஞானம் இரண்டுவயது குழந்தை, அது முதல் இதுவரையில் ஒரு நிமிஷமேனும் எனது முகத்தைப் பாராதிருந்ததில்லை. அப்படிக்கிருக்க தற்போது அன்னவளிடம் தெரிவியாமல் சென்று விடுவேனாகில், அன்னவள் பலவிதத்திலும் சந்தேகித்து மிகவும் மெலிந்து வருந்துவாள். ஆதலால், இச்செய்தியை குழந்தைக்குத் தெரிவித்து அன்னவளின் விடைபெற்று செல்கிறேன். சீக்கிரம் வரவழைப்பாய்.

லேனாள். வ-ம்:—காதலா! என்ன தாங்கள் இப்படி வேறு பிரித்து பேசுகின்றீரே?

லேனாள் ஷெடி மெட்டு.

அருமைக் குழந்தை யல்லோ நாதா ஞானம்
அன்புக்குகந்த யானும் மாதா இதின்
உரிமை யெனக்கில்லையோ வேதா கண்டால்
உம்மைப்போக விட்டிடாள் போதா அ

லேனாள். வ-ம்:—குழந்தை ஞானத்தை அழைத்து தாங்கள் வேட்டையாடச் செல்வதாக தெரிவிப்பீரானால், அன்னவள் அதின் ஆபத்தை யுணராது, தானும் கானகத்திற்கு வருவதாக வற்புறுத்துவாள், மறுப்பீராகில் வீண் அடம் சாதிப்பாள், ஏன் வீணில இவ்வளவு கஷ்டங்களை வைத்துக்கொள்ளுகின்றீர்? தாங்கள் சீக்கிரத்

தில் வந்து விடுங்கள். அப்படி ஞானம் கேட்பாளானால் அதற் கேற்றனும் ஒரு சாக்கு போக்குரைத்து அன்னவள் மனதைத் தேற்று தல் படுத்துகிறேன்.

தர். வ-ப்:—கண்மணி! நீயுரைப்பதும் உண்மையே. ஆனால்,

தர்மராஜன் ஷடி மெட்டு.

அறியாப் பருவ மவ ளாச்சே குழந்தை
ஆசையதிக முன்னா ளாச்சே அவள்
தெரிய ஆதரவான பேச்சே உரைத்
தேகா விடில் துயரா மாச்சே அ

தர். வ-ம்:—காதலி! குழந்தை! அப்படி வனத்திற்கு வருவ தாய் வற்புறுத்தினும், அதற்குகந்தபடி தேறுதலுரைத்து சென்று ல்லவோ யான் செல்லுமிடத்திலும் மனது ஒருவாறு அமைதியாக இருக்கும், இதைவிடுத்துச்செல்வதியலுமா? ஆதலால், கண்மணி! நீ இது விஷயத்தில் ஒன்றும் மறுப்புக் கூறாதுசென்று குழந்தையை இவ்விடமனுப்புவாய்.

லேனாள். வ-ம்:—அப்படியே அனுப்புகிறேன். பிறகு தங்க ளிஷ்டம்.

[லேனாள் போகிறாள், ஞானம் வருகிறாள்.]

ஞானசவுந்தரி தரு.

பத்திபத்தி என்ற இந்துஸ்தான் மெட்டு.

மரிதாயே மாதாவுன் சேயே
மலரடி தஞ்சமெனை காப்பாயே—ம ம
பரிவுள புனிதனில் பாக்யம் பெற்றாயே
பஞ்சைகள் துயர் நீக்கி பாதுகாத்தாயே
உரிமையாய் ஏசுதனை யீன்றாயே
உலகம் புகழ் தெய்வமாய் நின்றாயே ம

ஞானசவுந்தரி இங்கிலீஷ் நோட்.

அஞ்சவேண்டாம் பஞ்சவரே என்ற மெட்டு.

பல்லவி.

வந்தனமே தந்தையரே
உந்தன் பாதம் குழந்தையானே வ

அநுபல்லவி

எந்தனையே இங்கு எனையழைத்தீரையா
சிந்தைகளித்ததை செப்பிடுவீர்மெய்யா
சிரங் குனிந்தேன் பரிவுடனே
விபரஞ் சொல்வீர் திரமுடனே வ

ஞானம். வ-ம்:—பிதா! இவ்வடியாளை யழைத்த காரணமேதுவோ?

தர். வ-ம்—குழந்தாய்! கல்யாண்! அதாவது விசேஷமொன்று மில்லை.

தர்மராஜன் தரு.

பாரினிலேபுகழ் பாரதபுத்திரரே என்றமெட்டு.

ஜெனங்கள் குறையதை   தீர்த்திட கண்மணியே
        தெரிவாய்   பெண்மணியே
    வனத்திற் கேகிவாரேன்   வேட்டையாடயின்று
    மனது தளராமல்   விடைதருவாய் நன்று ஜெ

ஞானம். வ-ம்:—பிதா! என்ன? வனத்திற்கா செல்கின்றீர்?

தர். வ-ம்:— ஆம் குழந்தாய்!

ஞானம் ஷை பாட்டு தொகையரா.

எந்தனை விட்டுநீர்   ஏகுதலழகாமோ
    எடுத்துரைப்பீர்   தந்தையே
சிந்தை மிக வாடுதே சிறுமியானென் செய்வேன்
    ஈது இது மிக   விந்தையே

பாட்டுத்தொடர்.

உந்தனைப் பிரிந்   தொருகணமிருப்பேனோ
    உயிர்   தரித்திடுவேனோ
சிந்தனை சோர்ந்திடும்   நீசெந்தனை விட்டு
    சென்றிடிலே மனத்   தானேன் யானே கேட்டு உ

தர். வ-ம்:—குழந்தாய்! சகலகலைகளைக் கற்றுணர்ந்தும் ஒன்றுமறியாதுபோல் இத்தகைய பிடிவாதம் செய்வது நன்கல்ல. தவிர, நீயோ பெண்பிள்ளை, பேதமைகுணம், அதிலும் சிறியவள், ஆதலால்,

தர்மராஜன் ஷை பாட்டு தொகையரா.

அடவிக்கு வந்திட   ஆகாது ஆகாது
    அங்குபல மிருக   முண்டு
இடமுள்ளவதனை நீ   கண்டாலும் திடுக்கிட்டு
    தியங்குவாய் மனதில்   பெண்டு

பாட்டுத்தொடர்.

சிங்கமுடன் யானை   சீறிவருமம்மா
    சொல்வதை நீ   கேளம்மா
பங்கமடைந்திட   பாய்ச்சலிட்டு வரும்
    அங்கு சென்றால் மிக   ஆபத்துகள் நேரும் அ

ஞானம். வ-ம்:—பிதா! என்ன செய்வேன்? தங்களுடன் கானகத்திற்கு வரலாமெனினும், கானத்தின் விலங்குகளுக்கு சற்று அஞ்ச

வேண்டியிருக்கிறது ? அதற்கன்றி நமது அரண்மனையிலிருக்கவும், சிற்றன்னையின் சம்ரக்ஷணையிலிருக்க மனது கிஞ்சித்தேனும் இடங்தரவில்லை. ஆதலால்,

ஐந்துகாணுக்கிளைய என்றமெட்டு.

அன்னை தந்தையிலாத அரண்மனையிலிருக்க
குன்றுதே என்மனது என் ஐயா
கோதை இனி என்ன செய்வேன் அ

ஞானம். வ-ம்:—தந்தையே ! தாயாரிறந்த இதுநாள் வரையில் தங்களின் சம்ரக்ஷணையிலல்லவோ இருந்தேன் ? தாங்கள் இதை யறியாது இன்று என்னை எனது சிற்றன்னையின் வசம் ஒப்புவித்துச் செல்வதாக தெரிவிக்கின்றீரே ? தாங்களிருக்கும் பொழுதே எனது சிற்றன்னையார் என்னைப் பலவிதமாக தூஷித்து, எடுத்ததற்கெல்லாம் அடித்து துன்புறுத்துகின்றனளே, தாங்களில்லாத சமயத்தில் அதை விட பன்மடங்கு அதிகமான கஷ்டங்களைப் புரிவாளென்பதில் சந்தேகமா ? ஆதலால் இதை தாங்களே யோசித்துப்பாருங்கள்.

தர். வ-ம்:—புத்திரி ! ஞானம்.

தர்மராஜன் ஷெடி மெட்டு.

பெற்றதாய் மாண்டவுடன் பெரிய தாயாகவந்த
சிற்றன்னையாச்சுதம்மா என் மகளே
சீரழிக்க மாட்டாளம்மா பெ

தர். வ-ம்:—உன்னையீன்ற அன்னை உயிர் நீத்தவுடன் உன்னையாதரிக்கும் பொருட்டல்லவோ அன்னவளை விவாகம் புரிந்தேன்? அது முதல் உன்னை எவ்வளவோ அன்பு பாராட்டி வளர்த்து வருகின்றாள் இதை யான் நேரிலும் கண்டிருக்கின்றேன், அப்படி ஒன்றும் அன்னவள் மனதில் வேறு கபடமிருப்பதாக விளங்கவில்லை. ஆதலால், சிற்றன்னையுடன் சிறப்புற அரண்மனையிலேயே இரு, யான் சென்று வேட்டையாடி அதிசீக்கிரத்தில் வந்து விடுகிறேன்.

ஞான. வ-ம்:—பிதா! தாங்களே இந்த மாநிலமெல்லாம் அரசு புரியும் மன்னவர். தங்களுக்கு விளங்காததொன்றுமில்லை. அப்படிக் கிருந்தும், சேயை தாய் ஆதரிக்க சகல உரிமையுமுண்டு, ஆனால், தந்தைக்கு இரண்டாவது தாரமாக வந்தவள் கவனிப்பாளா ? அவளிடம் நமக்குதான் ஏதேனும் சுதந்திரமுண்டா ?

[இதற்குள் ஷேனன் ஓர்புறம் நின்று இதுகளை யெல்லாம் கேட்டு கோபிக்கின்றான்.]

ஷேனன். வ-ம்:—பேஷ் ! பேஷ் ! சங்கதி நன்றாகவே இருக்கின்றது ? சக்களத்தி பிள்ளை தன்மாட்டிற்குக் கொள்ளி யென்கிறார்களே அதை உலகிலுள்ளவர்களே சொல்வதில் பயனென்ன ? இந்த சக்களத்திமகளே தான் சொல்லவேண்டும். சபாஷ் ! அடி பாவி !

உனக்கு நான் எவ்வளவு தான் பணிவிடை புரிந்தாலும் விழலுக்கிறைத்த நீர் போலல்லவோ ஆகியது? நீ என்ன தகப்பன் செல்லமா? போகட்டும். உன் தந்தை வேட்டைக்குப் போனபிறகு உன் விஷயத்தில் ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்.

[லேனாள் வருகிறாள்.]

லேனாள் தரு.

நிச்சயமாய் தீர்க்கடன் என்றமெட்டு.

பல்லவி

என்னடி குழந்தாய் நீ இப்படி பிடிவாதம்
ஏந்திழையே செய்யலாகுமா என

அநுபல்லவி.

கண்மணி நீ யல்லவோ கானகமேக வேண்டாம்
கருத்துட னாதரிக்க உரித்தமாயானிருக்க என

சரணம்

பெற்ற மகளைவிட பெரியமகளாயுனை
பேணிவளர்க்கும் போது
உற்றது ஏதோ சொல்லி உரைக்குறாய் தந்தையிடம்
ஒன்றும் செய்யாதே வாது
பாங்கியருடன் கூடி பூங்காவனத்தை நாடி
தேங்காமல் விளையாடி தியாகன் தமிழைப்பாடி என

லேனாள். வ-ப்:—குழந்தாய்! ஞானம்! தந்தை காட்டிற்குச் சென்று வேட்டையாடி வரட்டும். நீ ஏன் இப்படி பிடிவாதம் செய்கின்றாய்? யானில்லையா உன்னைக்காப்பாற்ற? சந்தோஷமாக விடை கொடுத்தனுப்புமம்மா.

ஞானம். வ-ப்:—என்னைச்சிறுவயது முதல் சீராட்டி வளர்த்து சிறப்புடன் காப்பாற்றிய சிற்றன்னையே! தந்தையை யான் இதுவரையில் ஒருக்ஷணமேனும் பிரிந்தறியேனே, அப்படிக்கிருக்க தற்போது அன்னவரைப் பிரிந்திருப்பதென்றால் என்மனது சிறிது மிடந்தரவில்லை தாயே.

லேனாள். வ-ப்:—என்ன குழந்தாய் இது? எல்லாமறிந்த நீயே இப்படி பிடிவாதம் செய்யலாகுமா? தந்தை மாத்திரம் என்ன உனக்கு சாதித்துவிடப்போகின்றார்? தந்தை கானகம் செல்வதால் உனக்கு என்ன குறைவு ஏற்படப்போகின்றது? என்ன உனக்கு நாகரீகமான உடைகளில்லையே என்ற குறையா? அல்லது ஆபரணங்களில்லையே என்ற குறையா? அல்லது செல்வாக்கில் குறையா? இல்லை உன்னுடன் விளையாட பாங்கியர்களில்லையா? உனக்கு எத்தகைய சம்ரக்ஷணைகளுக்கும் யானிருக்க ஏனிப்படி வருந்துகிறாய்?

தர். வ-ப்:—காதலி! குழந்தையின் கருத்து அப்படிக்கல்ல கானகத்தின் விநோதத்தைக்காணும் பொருட்டுதான் இவ்விதம்

வைப்புருத்துகிருள். நீ இது விஷயத்திலொன்றும் மனது சலிப்பாதே! குழந்தாய்! ஞானசவுந்தரி!

தர்மராஜன் தரு.

கற்பிற் சிறந்த எந்தன் கனியே என்ற மெட்டு.

பல்லவி

மனது கசிந்து உருகாதே
மயங்காதே புலம்பாதே வருந்தாதே ம

அநுபல்லவி

உனது சிற்றன்னை மிக ஊக்கமாய் வளர்ப்பாள்
உனக்கு வேண்டிய பொருள் வகையெலாம் தருவாள்
தினமொரு பணியணி சூட்டியே பார்ப்பாள்
தேங்கிடாதே எனது கண்ணே
பசும் பொன்னே உனக்குசொன்னேன் களிப்பாய் இன்னே ம

வேளைத் தவரிடாமல் அன்னமே புசித்து
வித்தகன் எசுநாதன் கழலே பூசித்து
நாள்தவராது பள்ளிக் கேகி வாசித்து
நாகரீக முடனே இருப்பாய்
கோபம் தணிப்பாய் மனங்களிப்பாய் சுகந்தனிர்ப்பாய் ம

தந்தை யானில்லையென்று தயங்கிட வேண்டாம்
தாய்சொற்றுறந்து வீணில் தியங்கிட வேண்டாம்
உந்தனின் பாங்கிமாரை விடுத்திட வேண்டாம்
விருப்பமாய் நீங்களொன்று கூடி
வனம் நாடி செல்வீர் தேடி விளையாடி ம

தர். வ-ம்:—குழந்தாய்! நாழிகை அதிக மாகின்றது யான் சென்று வருகிறேன் சீக்கிரம் விடைகொடு.

ஞானம். வ-ம்:—பிதா! எத்தனை நாளைக்குள் வருவீர்?

தர். வ-ம்:—இன்னும்மூன்று தினத்திற்குள் வருகிறேன். பெண்மணி! லேனு! குழந்தையை அதி ஜாக்கிரதையுடன் பாதுகார்த்துக் கொள்.

லேனுள். வ-ம்:—நீங்கள் செல்லுங்கள் நாதா! நான் குழந்தையைபார்த்துக் கொள்கிறேன்.

தர். வ-ம்:—குழந்தாய்! ஞானம்! சென்றுவர உத்திரவுதாரு?

ஞானம். வ-ம்:—சீக்கிரத்தில் சென்று வந்துவிடுங்கள் பிதா!

[தர்மராஜன் போகிருன்.]

சீன்:—4.] [இடம்:—ரோமாபுரி தனி அறை.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, லேனாள், சேவகன், கொலையாளர்.

[ஞானசவுந்தரி தனிசோகம்.]

ஞானசவுந்தரி கண்ணி.

மாதா பிதா நீ கண்ணே என்ற மெட்டு.

தந்தை தனைப் பிரிந்தேனே தனித்துதென துள்ளத்தானே
சிந்தை மிக வெலிந்தேனே சிறுமியென் செய்குவேனே த
வேட்டை தனக்கவர் சென்றார் வீட்டில் யெனையிரு மென்றார்
நாட்டை விட்டு அகன்றார் நயமாகவே பேசி நின்றார் த
பக்தர் துதிக்கும் பெற்றமாதா பாக்கிய மாதா யீன்ற வேதா
சித்தசுத்த ஏகநாதா ஜீவாசுதக விநோதா த

ஞானம். வ-ப்:—உலகிலுள்ள சகல ஜீவராசிகளையும் காக்கும் ஏகநாதா! அன்னையாகிய மரியம்மையே! இப்பாதகியின் துயர் பறமா ஒருவித மார்க்கமும் தோன்ற வில்லையே! தந்தை பருவத்திலேயே எனையீன்ற அன்னையைப் பறிகொடுத்தேன் பிறகு குழந்தையாய் என்னை எவ்வளவோ சிறப்பாகவே வளர்த்து வருகின்றார். அப்படி வளர்த்து வந்தும் எனது சிற்றன்னை மாத்திரம் என்விஷயத்தில் எனது தந்தை ஒவ்வொன்றிற்கும் கண்டிக்கின்றார். அதுதான் அப்படியென்றாலோ, எனது தந்தை சென்ற இதுநேரம் வரையில் எனை ஏனென்றும் கேட்பாரில்லை, இன்னும் தந்தை வருவதற்குள் எனது சிற்றன்னையாள் எனை எவ்வளவு துன்பத்திற் காளாக்குவாளோ தெரியவில்லையே? ஆ! ஏசுநாதா! எல்லா முனது திருவிளையாடலே, இவ்வடியேனால் ஆகப்போவதென்ன?

[ஞானசவுந்தரி மனவருத்தத்துடனே நித்திரை செய்துவிடுகிறாள், அது சமயம் லேனாள் வருகிறாள்.]

லேனாள். வ-ப்:—ஆஹா! பேஷ்! பேஷ்! இம்மட்டிச் சிறுக்கியின் சேதி வெகு மதிப்பாகவே இருக்கிறது.

லேனாள் தரு

ஆமவடை மோருகுழம்பு என்றமெட்டு.

பல்லவி

என்ன பம்மதை கொண்டாளோ இவள்
எனிப்படி நித்திரை தான்புரி கின்றனளோ எ

அநுபல்லவி.

சண்டாளி என்மேல்பழி சாசனிட முரைத்து
விண்டாள் பலவிதமாய்
வீணுக்குழைத்தேனிது கான்முற்றிலு மிவட்கு எ

எப்பொழுது பார்த்தாலும் என்மேல் குற்றம்சொல்லுவாள்
ஒப்பவில்லை இவட்கு நான்
உத்தம நாதனுடனே சித்தங்களித்து வாழ்வது எ

லேனாள். வ-ம்:—பாதகி! எருமைகிடாபோல் தின்று கொழுப்ப தல்லாமல், யானிவளுக்கு பணிவிடை செய்யவேண்டுமாம், அப்படி செய்தபோதிலுங்கூட சக்களத்திபிள்ளை தலைமாட்டிற்குக்கொள்ளி என்பதுபோல் எனது பிராணகாதலரிடம் பொய்பித்தலாட்டங்களை யுரைத்து என் நாதனுக்கு என்மீது அருவருப்பை மூட்டுகிறாள். ஆதலால், இச்சண்டாளியை எப்படியேனும் தொலைத்துவிடவேண்டியது தான். ஏனென்றால்! என் நாதனுக்கு இவள் மீது அளவிலாத அன்பு ஏற்பட்டுவிட்டது. பிறகு என் வயிற்றில் ஏதோ ஒரு காயோ, பூவோ பூர்க்குமானால் பிறகு இப்பாதகி மாப்பிள்ளையுடன் இந்த ராஜ்ய முற்றிலும் அபகரித்துக்கொள்ளப்போகின்றாள். நானும் என் பிள்ளையும் நடுத்தெருவில் தான் நிற்கவேண்டும், பாதகிக்கு என்ன பம்மதைப்பார்? கொஞ்சமேனும் அச்சமில்லாமல் பட்டம் பகலிலேயே இப்படி மூதேவிபோல் தூங்குகின்றாளே? இவளை கேசிலா விடுவதா? இவளை நருக்கிப்பிழிந்து யமனுலகத்திற் கல்லவோ அனுப்பவேண்டும். (அருகில் சென்று) அடி! கழுதே! என்ன இப்படி தூங்குகிறாய் இது சத்திரமா? சாவடியா? சீச்சீ எழுந்திரு,

[லேனாள் பிரம்பினால் அடிக்கிறாள்.]

லேனாள் தரு.

சேவலாளி தேவராஜன் என்றமெட்டு.

மூதேவிச் சிரிக்கியான முண்டமே எழுந்திரு
மூதலைபோல் விழித்திடாமல் பதில்மொழி யுரைத்திடு
மூர்க்கமேனடி இது மார்க்கமாமோடி
மூடமே உமக்குறைக்க பிறந்திட்டேனோடி மூ
பட்டது பாழாச்சதோடி பாவியே உனக்கு நான்
பத்தாவிடம் கோளுரைக்க பாதகமென் செய்தேன் யான்
பாதகி நீயே கோள் தோதுரைத்தாயே
பகையை மூட்டி எனைதுரத்த பகட்டம் செய்தாயே மூ

லேனாள். வ-ம்:—பாதகி! உனக்கு யான் என்னதான் பாடுபடினும் ஆற்றில் கரைத்த புளிபோலாக்கினையே என்ன அன்மை? பெண்ணாக பிறந்தவள் வீட்டிலுள்ள வேலைகளைச் செய்யாமல், இப்படியே படுத்துக்கொண்டும், வேளைக்கு வேளை நாகரிகமான போஜனங்கள் அருந்திக்கொண்டும், தாசி வேசிபோல் வேளைக்கொரு ஆடைகளை அணிந்து தளுக்கிக்குலுக்கிக்கொண்டு தாதிகளுடன்கூடி நந்தவனத்திற்குப் போவதும், நதியில்குளிப்பதுமாக இருக்கின்றாயே?

காலைக்கு எவனுக்காவது ஒரு மாப்பிள்ளைக்கு நீ வாழ்க்கைப்பட்டால், அவன் வீட்டி லுள்ள வேலைகளையெல்லாம் யார்செய்வது? மூதேவி முண்டையே! மரியாதையாக எழுந்திரடி, (மறுபடியும் பிரம்பினால் அடிக்கிறாள்.) போஜனமருந்திய பாண்டங்களெல்லாம் அப்படியே யிருக்கிறதே அதையெல்லாம் யார் அலம்பிவைப்பது?

ஞானசவுந்தரி விருத்தம். இராகம்—முகாரி.

சிரமமாய் எனைவளர்த்து சீர்பெறச் செய்துமெத்த
உரமுடன் பாதுகார்த்த அன்னையே என்னையேனு
பிரம்பினால் அடிக்கின்றீரோ பிழையது யானென்செய்தேன்
திரமுட னதைமன்னித்து சிறுமியை காப்பாய்போற்றி.

லேனாள் வ-ம்:—சீச்சீ! துஷ்ட நாயே! என்னடி என்னிடமா எதிர்த்து பேசுகிறாய்? ஜாக்கிறதை!

ஞானம் வ-ம்:—ஐயோ! தாயே! யான் தங்களிடமெதிர்த்து பேசுவேனோ? தவிர, எனையீன்ற அன்னை உயிர்நீத்த பிறகு தங்களை யல்லவோ பெற்றதாயைவிட பெரியதாக மதித்திருக்கின்றேன்? தந்தையும் தங்களை நம்பியல்லவோ விடுத்துச் சென்றிருக்கின்றார்? அதுவுமன்றி, தாங்கள் எனை எவ்வளவு தான் அடிப்பினும் தங்களை யார் தான் கேட்கப்போகின்றனர். இவ்வடியேனை அதிக துன்புறுத்த வேண்டாமம்மணி!

லேனாள் வ-ம்:—என்னடி? கழுதே என்ன பாசாங்கு காட்டுகிறாய்? நீலிக்கு இமைக்கண்ணீர் நீர் என்பதுபோல் ஏதேதோ பேசி இப்படி கூச்சலிடுகின்றாயே? எழுந்திருந்து சீக்கிரம் அந்த சாமான்களைத் துலக்கி அலம்பி அழகாக அடுக்கிவைப்பாய்.

ஞானம் வ-ம்:—அம்மணி.

கண்மணியே பெண்மணியே என்ற மெட்டு.

வேலையொன்றும் யானறியேன் வாதுசெய்வ தேனோ தாயே
வேறுதுணை யாருமில்லை நீர்த்தநி காப்பாயே வே
பாத்திரம் துலக்கும் வகை பார்த்தறியேன் பாவை யானே
பாலகி இதுவரையில் வேலைகள் செய்தறியேனே வே
கற்றுநந்தா லல்லோசெய்வேன் கன்னியென்மேல் கோபமாமோ
கற்றறிய சிற்றன்னையே இத்தரி யுரைப்பாயம்மா வே

ஞானம் வ-ம்:—யான் எனது தாய்வயிற்றைவிட்டு சேயாகவுதித்த இதுநாள் வரையில் பாத்திரம் துலக்குவதைப் பார்த்தறியேனே? அப்படியிருக்க வீணில் எனை அடித்து துன்புறுத்துவதில் யாதுபயன் ஒருமுறைக் இருமுறைக் காட்டிக் கொடுத்திடில அட்டியின்றி செய்கின்றேனம்மணி!

வேலைள் வ-ம்:—என்னடி? என்ன? புழுக்கைச் சிரிக்கி? உன்மன தில் என்ன நினைத்துக்கொண்டாய்? உங்கள் கருமாதிக்கு யான் சமைத்துப்போடுவது மல்லாமல் சாமான்களைத் துலக்கவும் கற்றுக் கொடுக்க வேண்டுமோ? போகட்டும் இன்றைக்கு மாத்திரம் கற்றுக் கொடுக்கின்றேன். நாளை முதல் என்னிடம் ஒன்றும் தெரியாதென வுரைக்கக்கூடாது. எப்படி துலக்கவேண்டும் தெரியுமா?

வேலைள் தரு.

கூடைமுறங் கட்டுவோம் என்ற மெட்டு.

யாத்திரத் தன்னைத்துலக்க கையில் பிடிப்பாய் அந்த
பக்கத்திலிருக்கும் புளி தன்னையெடுப்பாய் இதை
நேர்த்தியுடனே துலக்கி நீரை தொடுப்பாய் ஒருவர்
கெட்டுரையாது இருக்க தண்ணீர் பிடிப்பாய்
கவனிப்பாக பாரு வேலை
காட்டுகிறேன் சீரு வீண்
கவலை ஏனோ கூறு நீ
கண்டு மனம் தேறு
காலையி லெழுந்திரடி கழுதை ஞானமே
கழுதை ஞானமே கழுதை ஞானமே
வேலைகளை செய்திடடி இந்த யா

வேலைள். வ-ம்:—கழுதைக்கு ஆவதுபோல் வயது மாத்திரம் ஆய்விட்டது. பயனென்ன? போகட்டும், இந்த வேலையை நாளைய காலையில் பார்த்துக்கொள்ளலாம். அதோ இருக்கும் உரலருகில் நின்று அந்த முறத்திலிருக்கும் அரிசியை சரிவர குத்திக்கொழித்து புடைத்து, தாத்தி உலையிலிடும்படி பக்குவப்படுத்துவாய் ஆகட்டும் சீக்கிரம்.

ஞானம். வ-ம்:—ஐயோ! அம்மணி!

ஞானசவுந்தரி கண்ணி.

பாலா என்ன காலம் வந்ததோடா என்ற மெட்டு.

அரிசி குத்திட யான் வகை யறியேன் தாயே ஆ ஆ உன்சேயை
அங்கமும் வாடுதே ஆவியும் சோருதே
மங்கையானென் செய்வேன் மனந்தடு மாறுதே அ

ஞானம். வ-ம்:—அரியாசச்சிறுமியாக இருந்த வென்னை அதிக வுக்கமுடன் ஆதரித்து வந்த அன்னையே! அதிக செல்வாக்கிலிருந்த என்னை திடீரென இத்தகைய தீர்ப்பந்தமான வேலைகளைச்செய்யும் படி ஆக்யாபித்தால் அடியேனெப்படிச்செய்வேன் காலபோக போக வல்லவோ ஒவ்வொரு வேலைகளாக யான் கற்றுணரவேண்டும் தவிர,

ஞானசவுந்தரி ஷை மெட்டு.

உலக்கை தன்னை கரத்தில்பிடித்திட தெரியேன் ஆ ஆ அறியேன்
உண்மையிலே யானும் மிக்க அரிசியை
என்னவிதம் குத்து வதோ சொல் சேதியை ஆ

லேனள் வ-ம்:—என்னடி இது? இப்படியெல்லாம் பாசாங்கு செய்தால் போகட்டுமென்று விட்டுவிடுவே னென்றும் கருத்தோ? அதெல்லாம் ஒன்றும் முடியாது, ஊம் ஆகட்டும் சீக்கிரம்.

ஞானம் வ-ம்:—ஐயோ! அண்டசராசர முற்றும் ஆதரிக்க வல்ல அகிலரக்ஷகா! அடியேன் படுந்துயர்க் கிறங்கி ஆதரித்திடலாகாதா? ஆ! என்ன செய்வேன்? குடிகளின் குறையை அகற்றும் பொருட்டு,

ஞானசவுந்தரி ஷை மெட்டு.

தந்தை சென்றார் வேட்டையாட ஏகநாதா ஆ ஆ வேதா
தாயான சிற்றன்னை யாரிடம் யான்சிக்கி
நியாய மழிந்திங்கு நின்றேன் மனம் வெக்கி ஆ

ஞானம் வ-ம்:—ஐயோ! குருடர், செவிடர்களின் குற்றத்தை பற்றாச் செய்தக்ருபாகரா? உனது கிருபை இப்படியுமிருக்குமா? அரியாச் சிறுமியாகிய யான் இத்தகைய வேதனை யுரலாமா? தாயே! வீணில் என்னை அடித்து வருத்தவேண்டாம். அடியேனால் இவ்வடிகளைத்தாள முடியவில்லை. ஆதலால், அடியேனுக்குத் தெரிந்த வரையில் அரிசியைக் குத்துகிறேன் க்ஷமிப்பீராக,

லேனள் வ-ம்:—என்னடி! நீ மகா ஜாலக்கள்ளியாக இருக்கின்றாயே? நாளைக்கு ஒரு மாப்பிள்ளையைக் கட்டிக்கொண்டு அவனுடன் ஜோடி போட்டுக்கொண்டு போகப் போகின்றனையே? அப்போது கூட இந்த வேலைகளெல்லாம் தெரியாது என்றுதான் உரைப்பாய் போலிருக்கிறது? அப்படி உரைப்பாயானால் உனது தாலியை அறுத்துக்கொண்டு தாய் வீட்டிற்கல்லவோ அனுப்பிவிடுவான், இதெல்லாம் யாருடைய பெயரைக் கெடுப்பதற்கு? ஊம் ஆகட்டும் சீக்கிரம்.

ஞானசவுந்தரி தரு.

நீயே சகாய என்ற மெட்டு.

பல்லவி.

அரிசி குத்திட நீதி அமைத்தோ என் தலையில்
அறியேன் அறியேன் தேவ மாதாவே ஆ

அநுபல்லவி

பரிந்தென்னை பெற்றெடுத்த பாதக ரெங்கன் பிதா
சிறிய தாய் சித்ரவதை செய்ய யெனை விடுத்தார் அ

சரணம்

புத்தகம் தனை எந்தும் புகழ் மிகும் கரத்தினுல்
பிடிக்கலானேன் உலக்கை விதியே
பித்தம் பிடித்தவள் போல் பிதற்றி திரிகின்றேனே
சித்தம் கலங்குதையோ சகியேன் துயரிதானே அ

லேனல். வ-ம்:—என்னடி ? என்ன ? அம்மா சும்மா ஒழுகிப் போகின்றாய்? தகப்பன் செல்லமா? சீ கழுதே! இப்படி தான் அரிசி குத்துவதா? இது தெரியாதா கிடவே நகத்தடிக்கு நான்கு துணைஎன் பதுபோல், உனது தகப்பனிடம் செல்லக்கொஞ்சமாத்திரம் தெரிகிறது இல்லாதும் பொல்லாதுமாக சொல்லி எனை வெறுக்கச் செய்யத்தெரி கிறது ? தகப்பன் காட்டிற்குப்போனால் நான் இருக்கமாட்டேனென் றும், சிற்றன்னைத் துன்பப்படுத்து வாளென்றும், காட்டிற்கு யானும் வருகிறேனென்றும் உரைக்கத்தெரிகின்றது ? இந்த அரிசியை மாத் திரம் குத்தத்தெரியவில்லையா என்ன ? சட் ! பாசாங்குக்கள்ளி ! இதோபார் யான் குத்திக்காட்டுகிறேன்.

[லேனுள் அரிசி குத்துகிறாள்.]

லேனுள் தரு.

வண்ணான் வந்தானே என்ற மெட்டு.

பல்லவி

அரிசி குத்தடியே அடி ஞானம்
அரிசி குத்தடியே அ

அநுபல்லவி

சரியாய் உலக்கையை சதுராய் பிடித்து
உரலில் படாமலே உமியை இடித்து அ

மத்யமத்தொடர்

குரிப்புடனே குத்துவாயடி ஆச்கு ஆச்கு
கொழித்திடவே முறத்திலேயடி ஆ ஆங் ஆ ஆங்
பரிவுடனே புடைப்பாய் நீயடி ஆச்கு ஆச்கு
பார்த்து கெல்லை பொறுக்குவாயடி ஆ ஆங் ஆ ஆங்

பல்லவித்தொடர்

முறத்தில் தோண்டடியே மூன்றுதரம்
புடைத்திடு மடியே அ

அநுபல்லவித்தொடர்

சிரத்தையுடன் உமி தவிடையும் போக்கி
சீக்கிரமாய் கோம்பி வெளுமை யுண்டாக்கி அ

மகுடத்தொடர்

ஒடியாமல் அரிசி யதனை ஆச்சு ஆச்சு
உருதியாக உலக்கையதனை ஆ ஆங் ஆ ஆங்
பிடித்து குத்தி புடைத்திடுவாய் நீ ஆச்சு ஆச்சு
பொருக்கி ஒன்ருய் சேர்த்து பெட்டி ஆ ஆங் ஆ ஆங்

பல்லவித்தொடர்

அடி-தின்ன கற்றுக்கொண்டாய் தனுக்குக்காட்டி
திரியகற்றுக் கொண்டாய் அ

அநுபல்லவித் தொடர்.

உண்பதுடுப்பதும் உன்தந்தை யார்க்கு
உகர்ந்தபடி கோள்கள் வைத்தாயே நோக்கு அ

மகுடத் தொடர்.

வேலைசெய்தல் பெண்கட்கழகு ஆச்சு ஆச்சு
விருப்பம் போல நடப்பது நன்று ஆ ஆங் ஆ ஆங்
சீலன் தியாக ராஜன் தமிழ்க்கு ஆச்சு ஆச்சு
சிறப் புருமே உந்தனெழுங்கு ஆ ஆங் ஆ ஆங்
உலக்கை மாத்துமடி ஒரு மூச்சு
துலக்கமாய் போட்டி அ

லேனுன் வ-ம்:—பார்த்துக் கொண்டனையா? இப்போதாவது செய் பார்க்கலாம்?

ஞானம் வ-ம்:—ஆ! சர்வேஸ்வரா! இதுவும் உனது திருவருளா! சிற்றன்னையின் சித்தம் போலவே இதோ அரிசி குத்துகிறேன்.

[ஞானசவுந்தரி அரிசிக் குத்திக்கொண்டே மூர்ச்சையாக விழுகிருள்.]

லேனுன் வ-ம்:—அடிக்கழுதே! என்னடி இது? இந்தபாசாங்கு வித்தையை எத்தனை நாட்களாக கற்றுக் கொண்டிருந்தாய்? போகட்டும், அடே! காவலா! நீசென்று இந்த கழுதைக்கு கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து இவளின் வாயில் ஊற்று.

காவ. வ-ம்:—அப்படியே மகாபாக்கிய மம்மணி !

[சேவகன் சென்று ஜலங்கொண்டுவர அதை லேனாள் ஞானசவுந்தரி யின் வாயில் ஊற்றி எழுப்பு கிறாள்.]

லேனாள். வ-ம்:—அடி ! கழுதே ! வேலை செய்வதற்கு முடியாமல் பாசாங்கு காட்டி தரையிலா விழுந்து விட்டாய் ? பாவம்! கஷ்டம் அதிகம், நீ என்ன செய்வாய் ? ஜலமருந்தி விட்டாயல்லவா ? இதோ இந்த விளக்குமாற்றை கையிலெடுத்துக்கொண்டு மாட்டுத் தொழுவத்திற்குச் சென்று அங்குள்ள சாணங்களைவாரி தொழுவத்தை சுத்தம்செய். என்ன விழிக்கின்றாய் ? போ சீக்கிரம்.

ஞானம். வ-ம்:—அப்படியே செய்கிறேன் தாயே !

[ஞானசவுந்தரி போகிறாள்.]

சீன்:—5] [இடம்:—மாட்டுத்தொழுவம்.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, லேனாள்.

[ஞானசவுந்தரி மாட்டுத்தொழுவத்தைப் பெருக்குகிறாள்.]

ஞானசவுந்தரி தரு.

இனியாயினும் என்னைச்சேர என்ற மெட்டு.

பல்லவி

முற்றமே பெருக்க பழி முன்னென்ன செய்தேன் (மு

அநுபல்லவி.

கற்பனையோ ஏகநாதா காதகி யெந்தன் மேல் வாதா (மு

சரணம்.

புத்தகம் பிடித்த கையால் முற்றமே பெருக்கலானேன்
சிற்றன்னையாளின் கதியால் சாணமதை வாரலானேன்
பெற்ற அன்னை யாளிருந்தால்
உற்ற அருமை யறிவாள் (மு

ஞானம். வ-ம்:—ஐயோ ! உடல் பதருகின்றதே ? சேயின் குறையை பெற்றத்தாயல்லவோ அறிவாள், பொருத மலடி அறிவளா ? கருமலரின் வாசனையை நாயறியுமா ? என்னையீன்ற அன்னை யிருப்பாளாயின் யான் எத்தகைய குற்றம் தான் புரியினும் சற்றே

ணும் சகிப்பேர்ப்படுமோ ? இதுவனைத்தும் எனது தந்தையார் நேரிலிருந்து காண்பாராயின் அன்னவர் இப்பாதகியை எக்கதிக்குள் ளாக்குவார் ? சண்டாளி ! என்னை இக்கதிக்காளாக்கும் பொருட்டு அநேக நாட்களாக எதிர்நோக்கி இருந்தனள் போலிருக்கிறது. அதற்குதகுந்த சமயம் நேரிடவும், என்னை பகையாளிபோல் அடிப்பதும், உதைப்பதுமாக இருக்கின்றாள். ஆயினும், எனது தந்தையார் வந்தவுடன் இது முற்றிலும் தெரிவித்து; இப்பாதகியை என்ன கதிக்குள்ளாக்குகிறேன் பார்.

[இதுவனைத்தும் மறைவிலிருந்து கேட்டுக்
கொண்டிருந்த லேனாள் வருகிறாள்.]

லேனாள் வ-ம்:—என்னடி அசடே ! ஏதேதோ பினத்திக் கொண்டிருக்கின்றாய் ?

ஞானம் வ-ம்:—ஐயோ ! தாயே ! யாதொன்றும் தங்களை தூஷிக்க வில்லையே ?

லேனாள் வ-ம்:—தூஷிக்க வில்லையா ? ஐயோ பாவம் ! ஒன்று மறியாத கன்னி அவளுக்கு பிடித்ததாம் ஒன்றைமாதம் ஜன்னி என்பது போல் சமயத்திற்குத் தக்கபடி சாதுர்யமாய் பேசுகின்றாயே ? சண்டாளி ! இப்படிதானா முற்றத்தைப் பெருக்குவது ?

[விளக்குமாற்றைக் கையில் பிடிங்கிக்கொண்டு
ஞானசவுந்தரியை அடிக்கின்றாள்.]

லேனாள் விருத்தம். இராகம்—மோகனம்.

ஏதடி நீதானென்னை ஏய்த்திட வென்றாயெண்ணி
வாதடி மிகவேபேசி வணக்கமாய் புலம்புகின்றாய்
ஓதடி பெருக்கித்தள்ள உதவாத உலோபியான
காதகி விளக்குமாற்றால் கதறிட அடித்திட்டேனே.

லேனாள் வ-ம்:—போகட்டும் சிறியவளாச்சுதே என்று கவனித்து உன்னை அதிகமாக கஷ்டம் கொடுக்காமல் வேலைகளை கற்பித்தால் பாசாங்கா காட்டுகிறாய் ? இதோ பார் உன் இழவுக்கு நானா வது செய்து காட்டுகிறேன் அதின்படியே நடந்துக்கொள்.

லேனாள் தரு.

வெளிக்கு சொன்னாலிவள் பிழைப்பு என்ற மெட்டு.

பல்லவி.

விளக்கு மாற்றை கைபிடித்து களத்தை பெருக்கடி-ஞானம் வி

அநுபல்லவி.

குலுக்கி நடந்து முகத்தைச் சுளுக்கி
தளுக்கு காட்டாதே தடித்த சிறுக்கி வி

சரணம்

ஓத்திலிருக்கும் வைக்கோல் செத்தை யெல்லாம்
ஓதுக்காமலே சொகுசாய்—சாணம்
ஒட்டாமலே வாரி வைத்து ஒருபுறம்
ஒழுங்காய் விளக்கிடுவாய்
மாட்டை யவிழ்த்தந்த மந்தையிலே ஓட்டி
தாட்டிகமாக இருப்பாய் தயைகாட்டி வி

லேன. வ-ம்:—கற்றுக்கொண்டனையா? நாளையிலிருந்து இன்று யான் காட்டிக்கொடுத்த வேலைகளைச் சரிவர செய்யவேண்டும் தெரிய வருகிறதா ?

ஞானம். வ-ம்:—அப்படியே செய்கிறேன், தாயே!

[ஞானம் தேம்பித்தேம்பி அழுகிறாள் லேனாள் ஞானத்தை சேர்த் தணைத்துக்கொண்டு.]

லேனாள். வ-ம்:—ஐயோ ! குழந்தாய் !

லேனாள் கண்ணி

வெட்ட வெளி தன்னை என்ற மெட்டு.

நாகரீக மிகுந்த ஞானசவுந்தரியே
ஏனழுகின்றாய் கண்ணே என் மகளே
ஏனழுகின்றாய் கண்ணே நா

லேனாள். வ-ம்:—புத்திரி ! ஞானம் ! ஏனம்மா இப்படி புலம்பு கின்றாய் ? என்ன வயிறு பசிக்கின்றதா ?

ஞானம். வ-ம்:—அன்னையே ! வேறொன்றுமில்லை.

ஞானசவுந்தரி டை மெட்டு.

அடித்த அடியால் மனம் அயர்ந்து உருகுதம்மா
கடுக்குதே தேக மெல்லாம் என் தாயே
கடுக்குதே தேக மெல்லாம் அ

ஞானம். வ-ம்:—தாங்கள் செல்வாக்கிலிருந்த என்னை, இத் தகைய சித்ரவதை புரிந்ததின் காரணமாக எனது தேகமெல்லாம் வலிக்கின்றது, அதின் பொருட்டுதான் புலம்புகின்றேன் தாயே !

லேனாள். வ-ம்:—குழந்தாய் ! இதற்குதானா வருந்துகின்றாய் ? அடி பைத்தியக்காரி !

லேனாள் மேற்படி மெட்டு.

அடி உதவுதலைப் போல் அன்னை தந்தையுதவார்
படித்தறிந்த [illegible]யோ குழந்தாய்
படித்தறி[illegible]யோ நா

லேனாள் வ-ம்:—என்னடி இது? அடி உதவுகிறதைப் போல் அன்னை தந்தையர்கள் உதவுவார்களா? தவிர, என்றைக் கிருப்பினும் ஒருநாளைக்கு ஒருவன் வீட்டில் வாழப் போகிறவளாச்சே? அங்கு இப்படி வேலையொன்றும் தெரியாமல் விழிப்பாயானால் கொண்டவன் பலவிதமாக கேலிவார்த்தையல்லவோ பேசுவான், அது உன்னை பெற்றோர்க்கும், வளர்த்தோர்க்கு மல்லவோ சாரும்?

ஞானம் வ-ம்:—தாயே! எனது திரேக வலியின் பொருட்டு வருந்தினேனே தவிர, தாங்களென்னை அடித்ததின் பொருட்டு கிஞ்சிற்றும் வருந்தவில்லை. ஏனெனில் எனது தாய் மடிந்தது முதல், தங்களின் சேய்போல் எனை சீராட்டி வளர்த்த தாங்கள்,

ஞானம் ஷை மெட்டு.

என்னை யடிப்பதற்கு — உன்னைவிட எவர்க்கு
சொந்தமுண்டு காண் — தாயே — எனம்மா
சொந்தமுண்டு காண் — தாயே — அ

ஞானம் வ-ம்:—தந்தையர்க்கு எப்பொழுது மறுதாரமாக வந்திரோ தங்களுக்கு சகல உரிமையு முண்டுதாயே!

லேனாள் வ-ம்:—கண்ணே! போகட்டும், உன்னை இவ்வளவு அடித்ததும் எதற்காக வென்றால், உனக்குவேலை கற்பிக்கவே, தெரிய வருகின்றதா? இதை உனது.

லேனாள் ஷை மெட்டு.

தந்தை யிடந்தனிலே — தெரியப் படுத்த வேண்டாம்
எந்தன் குலக் — கொழுந்தே — என் மகளே
எந்தன் குலக் — கொழுந்தே — நா

லேனாள் வ-ம்:—தெரிகின்றதா? குழந்தாய்! நீ சென்று வழக்கம்போல் வாசித்து பிறகு பாலருந்தி சயனித்துக்கொள்.

ஞானம். வ-ம்:—நல்லதம்மணி! [போகிறார்கள்.]

சீன்:—6] [இடம்:—லேனாள் அந்தபுரம்.

கதாநாயகர்:—லேனாள், சேவகன், கொலையாளிகள்.

[லேனாள் தனிமையாக அமர்ந்து ஆலோசிக்கிறாள்.]

லேனாள். வ-ம்:—ஆஹா! சின்னஞ் சிறுமியான ஞானசவுந்தரியை எவ்வளவு இம்சை புரிந்தோம்? அடடா! நமக்கென்ன மதியீனம்? முன்பின் யோசியாமலல்லவோ மூடத்தனமான காரியாதிகளைச் செய்துவிட்டோம். அன்னவளை நாம் எவ்வளவு தான் சந்தோஷப்படுத்தினும் இவ்விஷயத்தை எனது நாதன் வந்தவுடன் உரையாதிருக்கப் போகிறாளா? எப்படியும் உரைக்கதான் போகிறாள், இதுகளைக் கேட்ட அரசன் சும்மா விடப்போகின்றாரா? ஆஹா! என்ன இது? நாம் இப்படி முன்பின் யோசியாமல் வீண் பழியைத்தேடிக்கொண்டோமே? ஐயோ!

லேனாள் கண்ணி.

சரணகமலாலயத்தி லரைநிமிஷ என்ற மெட்டு.

மாமதியின் காரணத்தால் மகள் ஞானசவுந்தரியை
மனத்துயரடைய செய்து மகிழ்ந்தேனே
மன்னவர் வந்தவுடனே மாதிவள் வுரைத்தழுதால்
மாகோபங் கொண்டு யெனை கொல்வாரே
தீமை யான் புரிந்ததினால் தியங்கி மனம் வாடுகிறாள்
தீவினைக்கு என்ன செய்வேன் மரிதாயே
சக்களத்தி யீன்றமகள் தலைமாட்டின் கொள்ளியெனும்
சந்தேகந் தன்னையின்று அறிந்தேனே.

லே. வ-ம்:—இவள் எப்படியும் எனது நாதன் வந்ததும் கோள் மூட்டத்தான் போகிறாள், அதின் காரணமாக எனதுயிர் போகத்தான் போகிறது. என்ன செய்வது? தற்போது நமதுயிருக்கு நமனாக நிற்கும் இவளை நாம் உயிருடன் வைத்திருக்கப்படாது. நமது நாயகன் நாளைய காலையில் எப்படியும் வந்துவிடுவார். இதற்குள்ளாக இவளை எப்படியேனும் வேலை தீர்த்துவிடவேண்டியதுதான். இச் சமயத்தில் நாம் ஏதாவது சற்று தயை தாக்ஷண்யத்தை கவனிப்போமாகில் நமதுயிருக்கே சேதமேற்படும். ஆதலால், இன்றைய இராவிற்குள்ளாகவே இதற்குத்தக்க முயற்சிசெய்து இவளைத் துலைத்து விடவேண்டும். அடே! சேவக்.

சேவ. வ-ம்:—ஏனம்மணி!

லே. வ-ம்:—அடே! நீ சென்று நமது கொலையாளர்களை யானழைத்ததாக இங்கு வரச்செய்வாய்.

[சேவகன் போகிறான் கொலையாளிகள் வருகிறார்கள்.]

கொ. வ-ம்:—தாயே! கொலையாளர் நமஸ்கரிக்கின்றோம். இவ்வடியார்களை அழைத்த காரணத்தைப் புகல்வீர்?

லே. வ-ம்:—அடே! படையர்களே! கூச்சலிடாதீர்கள், செய்தியைத் தெரிவிக்கின்றேன் மர்மமாக கேட்டுக்கொள்ளுங்கள்.

கொ. வ-ம்:—அப்படியே தெரிவியுங்கள் தாயே!

லேனாள் தரு

சரி சரி என்ற மெட்டு.

பல்லவி.

சொலை நேரே
கேட்டிடுவீர் ரகஸ்யமொன்று (கொ)

அநுபல்லவி.

நிலையாகவே நடு ஜாமமே
கொலையே செய்ய திடமே கொள்வீர் (கொ)

லே. வ-ம்:—அடே! இந்த காரியத்தை ஒருவருக்கும் தெரியாமல் நடத்திவிட வேண்டும். அதாவது,

ஷெடி சரணம்.

கோபத்தால் களைத்து ஞானம் நித்திரை புரிகிறாள்
கோரிடு மௌனது நாதன் தன்வரவை பார்க்கிறாள்
களைத்திருக்கிறாள் வேலை
கலைமறுக்கிறாள் அனை
ஆபத்திற் குள்ளாக்கிடவே சோகமாக சாய்ந்தாள் ஞானம் (கொ)

கொ. வ-ம்:—ஐயோ! தாயே! இதுயென்ன அனியாயம்? ஆமாம்! அவளை என்னசெய்ய வேண்டுமென்கிறீர்?

லே. வ-ம்:—சட்! கழுதைகளே! ஏனிப்படி இறைந்து கூச்சலிடுகிறீர்களே? சங்கதி முழுதிலும் கேட்டபிறகல்லவோ தெரிவிக்க வேண்டும்?

கொ. வ-ம்:—தப்பிதம்! தப்பிதம்! தாயே! மன்னித்துக் கொள்ளுங்கள். பிறகு தெரிவியுங்கள்.

லே. வ-ம்:—அடே! கொலையாளர்களே!

ஷெடி சரணத்தொடர்.

சயனமீது ஞானம் நித்ரை செய்வதை நீர் நோக்குவீர்
சத்தமொன்று மில்லாமல் சந்தோஷமாய் தூக்குவீர்
காட்டை நோக்குவீர் அவள்
கழுத்தை போக்குவீர் நீங்கள்
கனமாகவே மனதாமதம் தணேயவையா தினியேசெல்வீர் ()

லே. வ-ம்:—தெரிகின்றதா? இச்செய்தி ஒருவருக்கும் தெரியப்படாது, அதோ அந்த அரைக்குள்ளிருக்கும் ஞானசவுந்தரியை அப்படியே கட்டிஉடன் எடுத்துச் சென்று கானகத்தில் வைத்து இவளுயிரை வதைத்து ஏதேனும் ஒரு அடையாளம் கொண்டுவந்து காட்டினுல் உடனே உங்களுக்கு,

லேனுள் விருத்தம். இராகம்—மோகனம்.

பொன்னது ஆளுக்கைந்து வாயிர மிறைமதாக
தன்மையாய் தருவேனந்த சண்டாளி உயிரைப்போக்கி
உண்மையாய் அடையாளந்தான் வுடனேநீர் கொண்டுவந்தால்
இன்றையா னுரைத்தாற்போல ஈய்குவேன் ஈய்குவேனே.

லே. வ-ம்:—ஏன் விழிக்கின்றீர்கள்? சிக்கிரம் சொல்லுங்கள்.

கொலை. வ-ப்:—தாயே! பாவம்! அறியாச் சிறுமியாச்சுதே? அதிலும் கல்வி, அறிவு, பக்தி முதலியனவைகள் நிறைந்துள்ள சிறுமி தங்களுக்கு அத்தகைய குறை என்ன செய்தாள்? ஐயோ பாவம்! அப்படி அவள் தங்களுக்கு ஏதேனும் குற்றம் புரியினும் தாங்கள் அன்னவளை வேறு விதத்தில் தண்டிக்கப்படாதா? ஒருவர் ஆவியைப் போக்குவதென்றால் அப்பழிபாவம் லேசில் விடுமா? வேண்டாம் தாயே! இக்கொடிய துர்ச்செய்கையை விடுத்து வேறெதையேனும் தெரிவியுங்களம்மணி!

லேனாள். வ-ம்:—அடே! கழுதைகளே! உங்களுக்கு ஏன் இந்த நியாயம்? சொல்வதைப்போல் செய்துவிட்டு அதற்குத்தக்க வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளாமல் ஆண்டிக்கு அம்பாரம் கணக்கு எதற்காக?

கொலை. வ-ம்:—அம்மணி! உண்மை தான்! இது ராஜாங்கக் காரியம் இதில் யாங்கள் பிரவேசிப்பது தகாத காரியந்தான். ஆனால், அக்கன்னிகையைகொன்று விடுவோமானால்.

கொலையாளர் கண்ணி.

ஐயையோ தந்தையே என்ற மெட்டு.

அரசனறிந்திடில் அம்மணி உம்மையும்
அடியார்களெம்மையும் அறுப்பார் வாளாலே
அதற்குயாமென்ன செய்வோம்
ஆவிமிக சோருதம்மா அக்காரியம் புரிய அ

லேனாள். வ-ம்:—அடே! என் வார்த்தைகளை என்னவென்று நினைத்துக்கொண்டீர்? ஜாக்கிரதை! நீங்கள் இக்காரியத்தில் ஏதேனும் சற்று மயங்குவீராகில் நாளைய உதயத்திற்கெல்லாம் உங்களுயிரை என் நாதனின் கட்கத்திற்கு பலியிடச்செய்வேன் இதை மாத்திரம் உங்களின் இதயத்திற் பதித்துவையுங்கள்.

கொலை. வ-ப்:—தாயே! என்ன இது தாங்களுரைப்பது விந்தையாயிருக்கின்றதே? ஒன்று மறியாத ஒருவரை கொல்வதென்றால் அரசன் தான் சம்மதிப்பாரா? அல்லது யார்தான் சம்மதிப்பார்?

லேனாள். வ-ம்:—அடே! உங்களுயிரைப் போக்குவதென்றால் நியாயத்தையா உரைப்பேன்? அப்படிக்கொன்றும் நினைத்து விடாதீர்கள். அதாவது,

லேனாள் ஷடி மெட்டு.

கணவனில்லாத சமயந்தனிலெந்தன்
கற்பை கெடுத்திட வந்தீர்களென்றும்
கடும்பொய் யதை புரைத்து
கொல்ல செய்வேன் தொலையுற பொல்லாப்பழியினாலே அ

கொலே. வ-ம்:—சரிதான், பெண்கள் பழி போட்டுத்தலையை வாங்குவாரென்பது இதுதானே? தங்களின் செய்தி இப்பொழுது தான் விளங்கியது.

மற்றொரு கொலையாளி. வ-ம்:—அடே! நமக்கென்ன நாம் எதற்கு இதையெல்லாம் கவனிக்கவேண்டும்? அறுமைத்தாக ஆளொன்றுக்கு ஐயாயிரம் பொன் வருவதென்றால் இதை ஏன் வீணில் இழக்கவேண்டும்? சரிதான் தாயே! அப்படியே இன்றைய இரவிற்குள் வேலை தீர்த்து விடுகிறோம்.

லேனாள். வ-ம்:—சீக்கிரம் செல்லுங்கள் ஆனால் இந்த இரகஸ்யத்தை மாத்திரம் மற்றெவருக்காவது வெளியிடப்போகின்றீர்கள். ஜாக்கிரதை!

கொலே. வ-ம்:—அப்படியே தாயே!

[கொலையாளிகள் போகிறார்கள்.]

சீன்:—7] [இடம்:—சயனக்கிரஹம்.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, கொலையாளிகள்.

[ஞானசவுந்தரி கட்டிலின் மீது அமர்ந்து பட்ட பாடுகளை எல்லாம் நினைந்துருகிறாள்.]

ஞானசவுந்தரி தரு.

யார் போய் சொல்வார் என்ற மெட்டு.

பல்லவி.

தேவமாதாவே நினையோ
செய்தாய் சதியோ—எங்கள் தே

அநுபல்லவி

தந்தையில்லா சமயம் தாயான சிற்றன்னையாள்
தவிக்கப் பிரம்பினாலே அடித்தாள் கதை
படித்தாள் ஐயோ தே

ஞானம். வ-ம்:—ஐயோ! அச்சண்டாளி என்னை அடித்ததோடாவது விடுத்தாளா? இல்லையே!

டெ. அநுபல்லவித்தொடர்.

விளக்கு மாற்றைக்கொடுத்து வீட்டைப் பெருக்குமென்றாள்
வெகுண்டு வேலைவாங்கிடத் துணிந்தாள் மனம்
கனத்தாள் அம்மா தே

ஞானம். வ-ம்:—அடி! பாதகி! அரியாச் சிறுமியாகிய என் பிதா உனக்கென்னடி வைராக்கியம்? ஐயோ! அச்சண்டாளியால் யான்,

டெ. அநுபல்லவித் தொடர்.

அலாவுலக்கைக் கொண்டு அரிசியைக் குத்தலானேன்
அதனைப் புடைத்துக் கொழித்தேனே திகைத்
தேனே தாயே தே

ஞா. வ-ம்:—அந்த பாமபாதகி! என்னை இதோடாவது விடுத் தாளா?

ஷெ அதுபல்லவித் தொடர்.

பாத்திரந் துலக்கவும் பலவேலை செய்திடவும்
பதரித் துடிக்கவென்னை அடித்தாள் உதை
கொடுத்தாள் அன்னை (தே)

ஞா. வ-ம்:—இவ்வளவு கதிக்குள்ளாக்கியது மல்லாமல்,

ஷெ அதுபல்லவித் தொடர்.

மாட்டுத் தொழுவத்திலே மாளாத வேலைசெய்ய
மலடியெந்தனை விடுத்தாளே அடித்
தாளே எங்கள் (தே)

ஞா. வ-ம்:—இவ்வளவும் செய்தது போதாமல் கடைசியில் எனக்கு வேலை கற்றுக்கொடுப்பதாகவும், என் தந்தையரிடம் இதை தெரிவியாதிருக்கும்படியும் தெரிவித்தாள், சண்டாளியை எனது தந்தை வந்ததும் என்ன கதி படுத்துகிறேன் பார்? இதோடு இவள் எமனுலகையல்லவோ அடையவேண்டும். தவிர, நாம் நித்திரை புரிய இவ்விடத்தில் வந்ததாலும், இன்று முழுதும் அப் பாதகி சிற்றன்னை தெரிவித்தபடி வேலைகளை மிகுந்த கஷ்டத்துடன் செய்ததாலும், எனக்கொருவிதமான கவலையுண்டாகிறது, வேட்டைக்குச் சென்ற தந்தை இன்னும் வரவில்லை. சண்டாளி! யான் விழித்திருக்கையிலேயே இத்தகைய துன்பமெல்லாம் புரிந்தவள், யான் நித்திரையிலிருக்கும் சமயம் என்னதான் செய்யமாட்டாள்? போகட்டும், எல்லாவற்றிற்கும் தாயே! தேவமாதா! நீதான் துணையிருந்து எனை பாதுகாக்க வேண்டும். இதோ எனக்காக வைத்திருக்கும் பாலை அருந்திவிட்டு சயனிக்கலாம்.

[ஞானசவுந்தரி பாலை அருந்திவிட்டு
சயனித்து நித்திரை செய்கிறாள்
கொலையாளிகள் வருகிறார்கள்.]

1-வது கொலை. வ-ம்:—அடே! அண்ணே! அழகிலும் அறிவிலும் சிறந்த அரச குமாரத்தியாகிய இந்த ஞானத்தைதான் அப் பாதகி வெட்டிப்போடும்படி ஆக்யாபித்தாள். என்னடா செய்வது மனம் வரவில்லையே?

2-வது கொலை. வ-ம்:—ஆமாம், பெண்ணைப்பார்த்தால் பரிதாபமாகதானிருக்கிறது, ஆனால் ஆளொன்றுக்கு ஐயாயிரம் பொன் வருகிறதே அதை யார் கொடுப்பார்கள். போடா போ! பைத்தியக்காரா? இப்பெண்ணை கொலைசெய்துவிட்டு பொன்னை நாம் பெற்றுக்கொண்டு போய்விட்டால் பிறகு அந்த அம்மாள் அரசனுக்கு என்ன ஜவாப் கொடுக்கிறாளோ கொடுக்கட்டுமே?

[பிறகு மனம் துணிந்து ஞானசவுந்தரியை
கட்டிலுடன் தூக்கிச் செல்கிறார்கள்.]

சீன்:—8.] [இடம்:—வனாந்திரம்.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, பிலேந்திரன், வேடர், சிங்கிலியர் கொலையாளிகள்.

[காட்டில் ஞானசவுந்தரியை கட்டிலுடன் தூக்கிக்கொண்டுபோய் வைத்து கொலையாளிகள் கட்டிலின் பக்கத்தில் நிற்கின்றனர், ஞானசவுந்தரி நித்திரைவிட்டெழுந்திருக்கிருள்.]

ஞா. வ-ம்:—ஹா! சர்வேஸ்வரா! இதென்ன ஆச்சரியம்?

ஞானசவுந்தரி தரு.

காந்தியோ பரம யேழை சன்யாசி என்ற மெட்டு.

கானகந்தனில் கடவுளே யாரோ
கட்டிலுடனே தூக்கிக் கொண்டு வந்தாரோ
யானவரை யறியேன் அருகில் வாராரோ
அர்ச்சிஷ்ட ஏகநாதா அடியேன் யான்வேரோ கா

சிற்றன்னையினல் துயர்மிக பட்டேன்
சகித்து பிரம்பினலே அடியுண்டு கெட்டேன்
விற்பனர் புகழ் தந்தை வனம் போகவிட்டேன்
வெகுவாய் மனத்தளர்ந்து உனதடி தொட்டேன் கா

ஞா. வ-ம்:—ஆ! அண்டபகிரண்ட முதல் அற்புதமான திருவிளையாடல்களை புரிந்த அகிலரக்ஷகா! அடியாள் உனக்கு செய்த குறை யாதோ? ஐயோ! என்ன இது? நாம் இப்பொழுது எங்கே இருக்கிறோம்? சிற்றன்னையின் உபத்திரவத்திற்கெல்லாம் உட்பட்டு அமுத மருந்தி அரண்மனையி லயர்ந்த நாம் இவ்வடர்ந்த கானகத்தில் தனிமையாக இருக்கக் காரணமேது? நாம் உண்மையிலேயே கானகத்தில் தான் இருக்கிறோமா? அல்லது சொற்பனவஸ்தையா? இல்லை! இல்லை! உண்மையில் கானகம் தான். ஆனல், நாம் இந்த கானகத்திற்கு எவ்விதம் வந்தோம்? அப்படி நம்மை யாரேனும் தூக்கி வந்திருப்பினும் அன்னவர்கள் அருகிலிருக்க வேண்டுமே? என்ன இது? நமது தந்தை யில்லாத சமயத்தில் இப்பெரும் சங்கடம் நமக்கு விளைந்ததே? ஆ! அன்னையாகிய மரியம்மா! நீ இவ்வடியேனை காப்பாயாக.

[இதற்குள் கொலையாளிகள் ஞானசவுந்தரிமுன் தோன்றுகின்றனர்.]

ஞா. வ-ம்:—ஹா! இவர்கள் யார்? இவர்கள்தான் நம்மை இவ்விடம் கொண்டு வந்தார்கள்போல் தோன்றுகிறது. ஐயோ! இதென்ன இப்படி உருவிய வாளுடன் நிற்கின்றார்களே? சந்ததி

முற்றும் மர்மமாகவே இருக்கின்றதே? சகலமும் இவர்களையே கேட்டறியலாம் (கொலையாளிகளை நோக்கி) ஐயா! நீங்கள் யார்? எதற்காக இவ்விடத்தில் உருவிய கத்தியுடன் நிற்கின்றீர்கள்?

கொலை வ-ம்:—அம்மணி! குழந்தாய்! நீ மகாராஜாவின் புத்திரியாக பிறந்தும் வாழ்வதற்கு காலம் நெருங்கிவிட்டது. என்ன செய்யலாம் தங்களைக்கொன்று வரும்படி தங்களின் சிற்றன்னையார் உத்திரவளித்தனள்.

ஞானம் வ-ம்:—ஆ! என்ன? சிற்றன்னையா? அடிச் சண்டாளி! என்னைக்கொல்வதால் நீ யடையும் பயன்யாது? அடிபாதகி! யான் என் தந்தையுடன் சென்றிருந்தாலும் இருப்பேன், அதற்கும் ஏதேதோ மறுப்புகளைக் கூறி உண்மையில் அதிக அன்புள்ளவள் போல் அபிநயித்து இறுதியில் இத்தகைய பழியைக் கைக்கொள்ள துணிந்தனையே? ஆ! மரியாயே!

ஞானசவுந்தரி தரு.

இராமபஜன ஹோதியா என்ற மெட்டு.

பல்லவி.

அடியே னேதுசெய்வேன் அன்னை மரியே அ

அநுபல்லவி.

படிமிசை யுனையே பணிந்தே னுன்றனையே
பழி இது காரணமே பாவை என்னையே அ
அன்புடன் என் பிதாவை அடவிக் கனுப்பிவிட்டு
அடாதகாரியம் செய்தாளே அவனி மேலே அ
வீட்டுவேலைக ளெல்லாம் வேணது செய்யுமென்றாள்
விரட்டிப் பிரம்பாலடித்தாள் விதி முடித்தாள். அ
தனியே யான் மாளும் சேதி தந்தைக் குரைப்போர் யாரோ
தயங்குது எந்தன்நெஞ்சமே தாயேஎன் வஞ்சமே அ

1-வது கொலை. வ-ம்:—அடே! தம்பி! பாவம்! இச் சிறுமியை எப்படியடா கொல்வது? இவளை இப்படியே விட்டுவிட்டாலும் எங்காகிலும் சென்று பிழைத்துக் கொள்வாள். லேனாளுக்கு மாத்திரம் கொலைசெய்து விட்டதாக கூறிவிட்டால் போச்சுது.

2-வது கொலை. வ-ம்:—சபாஷ்! அண்ணே! நீ சொல்வது வேடிக்கையாக இருக்கின்றதே? அவள் இச்சிறுமியை கொன்று விட்டுவரும்படி தெரிவித்தாலும் நீயுரைத்தபடியே செய்யலாம். ஆனால், கொல்வதல்லாமல் ஒரு அம்சத்தை அறுத்தெடுத்துவரும் படி தெரிவித்திருக்கின்றாளே, நாம் தனிமையாய் சென்றால் நமக்குத்தெரிவித்த பொன்னும் கொடுக்கமாட்டாள், நாமும் அதோகதிதான் இந்த ஒரு பெண்ணுக்காக நம்முயிர் போகலாமா?

1-வது கொலை. வ-ம்:—ஆம். அதுவும் உண்மைதான் ஆனல், அந்தப்பெண்ணையே நேரில் கேட்டு தன் மனச்சம்மதத்தைத் தெரிந்துக் கொள்ளலாம்.

2-வது வ-ம்:—அப்படி தான் செய்யவேண்டும் [ஞானத்தினருகில் வந்து] அம்மா! இது விஷயத்தில் உனது கருத்தென்ன? சீக்கிரம் வெளியிடு, யாங்கள் போகவேண்டும்.

ஞானம். வ-ம்:—ஐயா! கொலையாளர்களே!

ஞானசவுந்தரி கண்ணி.

என்னரசே என்மணியே என்ற மெட்டு.

என்னசெய்வேன் ஏதுசெய்வேன் எந்தனின் விதியிதுவோ
எக்கமுற சிற்றன்னையாள் என்னையே கொல்ல நினைத்தாள் என
பெற்றவளே தானறிவாள் உற்றபிள்ளையி னருமை
பெருமலடி யேனறிய போகிறாளதின்பெருமை என
தந்தையிந்த செய்தி தன்னை தானறிந்தால் மாண்டிடுவார்
தப்பிதஞ்சேர் லேனள் தனை தள்ளியே கழுத்தறப்பார் என
எந்தனையே கொல்வதினல் என்ன சுகம் கண்டனளோ
எந்நிழை என் மீதில் வஞ்சம் ஏனிவள்தான் கொண்டனளோ என

ஞானம். வ-ம்:—அடிச்சண்டாளி! உனக்கு யான் அப்படிக்கென்னபெரும் பிழைகளைப்புரிந்தேன்? வீணில் என்னுயிரைமாய்ப்பது உனக்கு நீதி தானே? இப்பெண்பழி உங்கள் பல தலைமுறைக்கும் தாங்காதா? அடிபாவி! வீணில் இப்படியும் ஒரு வுயிரைப் போக்க மனது துணியலாமா? எனதுயிரை நீ போக்கினல், உனதுயிரை எனது தந்தை போக்காரா? கானகம் சென்ற எனது தந்தை வந்ததும் உனது வசத்தில் ஒப்புவித்த எனதருங் குழந்தை எங்கே என்று அவர் கேட்டால் அன்னவருக்கு என்ன பதில் உரைக்கப் போகின்றனையே? ஐயா கொலையாளிகளே! உங்களரசியின் ஆக்கினைப்படி எனைவதைத்துச் செல்லுங்கள்.

1-வது கொலை. வ-ம்:—அடே! தம்பி! பாவம் இச்சிறுமியை பார்க்கும்பொழுதே பரிதாபமாக இருக்கின்றதே இவளை எப்படியடா கொல்வது?

2-வது கொலை. வ-ம்:—என்ன செய்வது? ஆனல் இவளைக் கொல்லாமல் இரண்டு கரங்களை மாத்திரம் துண்டித்துக்கொண்டு போய் கொன்றுவிட்டதாக நிரூபித்துவிடலாம், பிறகு இவள் அதிர்ஷ்டமிருக்குமாயின் பிழைத்துக் கொள்ளட்டும்.

1-வது கொலை. வ-ம்:—ஆம்! அது தான் தகுந்த யோசனை, அம்மா! உன்னை கொல்லும்படி அரசி ஆக்கினையிட்டார். ஆனாலும் நீயோ சிறுமியாயிருப்பதால், உனை அப்படி செய்ய மனம் வரவில்லை. தவிர; அரசியின் உத்திரவையும் மீறலாகாது. அதற்காக உன் கரத்தை மாத்திரம் வெட்டி எடுத்துக்கொண்டு போகின்றோம்.

ஞா. வ-ம்:—அண்ணா! எப்படிச் செய்யினும் தங்களினிஷ்டமே.

2-வது கொ. வ-ம்:—குழந்தாய்! வருத்தம் வையாதே! சந்தோஷமாகவே இரு. உனது இரு கரங்களையும் நீட்டிக்கொண்டு முழங்காலிட்டு அமர்ந்து அன்னையாகிய தேவமாதாவை தியானித்துக்கொண்டிரு.

ஞானசவுந்தரி தரு.

அடைக்கலமே அடைக்கலமே என்ற மெட்டு.

பல்லவி

அம்மணியே அம்மணியே
அடியே னுனதுபாதம் அண்டினே னுதரியே அ

அநுபல்லவி.

விம்மிவிம்மி உன்னைநான் வேண்டி நின்றேனே
விதிவசத்தாலே காட்டில் உயிர்விடலானேன் அ

சரணங்கள்

தாமரை யிலைமீது தண்ணீரைப்போல
தவித்து புலம்புகிறேன் தாரணிமேலே
தீமையென்ன புரிந்தேன் சிற்றன்னையாலே
சித்ரவதைபுரிய நேர்ந்ததின்றே அ
அரசன் மகளாக யான் அவனியில் பிறந்து
அரும்பெருங் கல்விதனை அன்புடனுணர்ந்து
சிறப்புடன் தந்தையிடம் செல்வாக்காயிருந்து
செழித்தேனேசிற் றன்னையால் பரிந்து அ

[ஞானசவுந்தரி பாடிக்கொண்டே இருக்கின்றாள், கொலையாளிகள் கரத்தைவெட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள்.]

ஞா. வ-ம்:—ஹா! தேவர்கள் புகழும், தேவமாமரியே!

[துடித்து கீழே விழுந்து புலம்புகிறாள்.]

ஞானசவுந்தரி தரு.

எதிசுதி நாகு ரங்கா என்ற மெட்டு.

பல்லவி

காக்கனிமுந் தேனே
காராய் வாராய் கா

அநுபல்லவி

பெருமாராக பிரளுதே உதிரம்
பதரு தாவி சிதரு துயிர்தான் கா

சரணம்

அனியாயமாக சிற் றன்னையினாலே
அருங்கா மிழக்தேன் விதிவசத்தாலே
அய்யோ உதிரம் ஆராய் பெருக
ஆவினதே தேவ பாதாலே வருக கா

ஞா. வ-ப்.—ஐயோ! எனதுயிரைப் போக்க வந்தவர்கள் எனது கழுத்தையேனும் இருதுண்டமாக சேதித்துவிடப்படாதா? இப்படியும் சித்ரவதை புரியலாமா? ஐயோ! என்செய்வேன் உதிரம் ஆராகப் பிரளுகின்றதே? இப் பாவியின் உயிர் இன்னுல் போகாமலிருக்கின்றதே? வேதனையோ இச் சிறியேனால் தாளமுடியவில்லையே? ஐயோ! திக்கில்லாருக்கு தெய்வந்துணை யென்கிறார்களே? இத்தகைய கொடிய ஆபத்திலிருந்து எனையார்தான் காப்பாற்றப் போகின்றனர்? ஆ! சர்வேஸ்வரா!

சீன்:—9.] [இடம்:—வேறு கானகம்.

கதாநாயகர்:—பிலேந்திரன், வேடாகள், சேவகன்.

[பிலேந்திரன் வேட்டையாடிக் கொண்டு வருகிறான்.]

பிலேந்திரன் தரு.

ஜெகமுள்ள உயிர்களை என்ற மெட்டு.

பல்லவி.

விரட்டோட வேங்கைபுலி வேகமாய் கணைதொடுத்து
துரியோமடித்திடுவோம் துரிதமுடனே வாரீர் வி

அநுபல்லவி.

பாரிலே கம்குடிகளின் பயிர்க ளழித்ததன்றி
சீரிபல ஜந்துக்களை சித்ரவதை புரிந்ததால் வீ

சரணம்

காட்டினில் வாழ்ந்திடும் கரடி புலி சிங்கமும்
காட்டிற் குள்ளே புகுந்து நூஞ்சை புஞ்சைகளெல்லாம்
கூட்டமாகவே கூடி கலேத்து அழித்ததுடன்
மாட்டையும் ஆட்டையும் மடித்து உதிரமதை
குடித்து குளத்தை கடித்து மரத்தை யொடித்து
அரண்மனைக்குள் புகுந்து அதமதுபுரிந்ததால்
அலறிவந்த குடிகள்
குறையை யகற்றிடவே குத்தியேநாமீட்டியாலே
சரபக்கவி சொல் திபாக ராஜனின் மொழியைப்போலே வீ

பிலே. வ-ம்:—பிரதான்! அதோ பார்த்தீரா? அந்த சிருத்தைக் கூட்டங்களும் யானையின் கூட்டங்களும், நமைக்கண்டதும் ஒருங்கு சேர்ந்து சீறிஓடிவருகின்றது (சற்று திகைத்து) ஆஹா! இதென்ன? இவ்வத்வான கானகத்தில் ஏதோ ஒரு பெண் புலம்பும் குரல்கேட்கின்றது? (உற்று நோக்கி)

ஒஹோ ஒருபெண்ணை எனற மெட்டு.

பார் பார் அதோ ஒரு பாவை புலம்புறாள்
யார்தானவளோ அடிக்கக் கதருறாள்
நேர் நோக உதிரம் வடித்து தியங்குறாள்
சீர்தானழிந்தாற்போல் சிந்தை கலங்குறாள் பா

பிலேங். வ-ம்:—அடே! சேனைவீரர்களே! அதோ பார்த்தீர்களா? யாரோ ஒரு பெண் உதிரத்தில் புரண்டு அழுகின்றாள், சற்கதியாவும் அருகில் சென்று விசாரித்து வருகின்றேன் நீங்கள் இவ்விடத்திலேயே அதிஜாக்கிரதையுடனிருங்கள் [போகிறான்.]

சீன்:—10.] [இடம்:—வனாந்திரம்.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, பிலேந்திரன், சேனைவீரர்கள்.

[ஞானசவுந்தரி புலம்பிக்கொண்டிருக்கின்றாள் பிலேந்திரன் வருகிறான்.]

பிலேங். வ-ம்:—ஆஹா! இதென்ன பரிதாபம்? இச்சிறு பிராயத்தில் இம்மங்கை தனதிருகரங்களை இழக்க என்ன குற்றம் புரிந்திருக்கலாம்? ஐயோ! பாவம்! இம்மாதர்க்கரசியை இவ்வித கதிக்குள்ளாக்கியவர் யாராக இருக்கலாம்? ஆஹா! இரகற்ற பக்ஷிபோல்

இருகரங்களையும் இழந்து இப்படி உதிரத்தில் புரண்டு பாதவிக்கின்றனளே ? இவள் தான் இப்படி புலம்புகின்றாளெனினிலோ இன்னவளருகில் கூட ஒருவரையுங் காணோமே ? சரி எல்லாம் இம்மங்கையையே கேட்டுத்தெரிந்துக்கொள்ளலாம்.

பிலேந்திரன் தரு.

ஏனோசந்தேக மினியே என்ற மெட்டு.

பல்லவி.

யார்நீ புரைப்பாய் மயிலே அதி
விரைவாய் என்னிடத்திலே யா

அநுபல்லவி.

பார்மீதிலுன் கரத்தை பரிகொடுத்த விபரம்
கூர்வாயெனக்கதனை
குணமுடனேமிக மனக்களாமலே யா
இந்த சிறுவயதில் என்ன குற்றம் புரிந்தாய்
அந்த விபரமதை
அதிவிரைவினி லுரைத் திடி லுனைக்கைவிடேன் யா
காரணத்தையுரைத்தால் காப்பேனுனை சத்தியமாய்
யாராலுனக்கு யிந்த
ஆபத்தடைந்து சோகமடைந்தாய் யா

பிலேக். வ-ம்:—பெண்ணே ! ஏனிப்படி இறகற்ற பறவைபோல் இருகரங்களுமின்றி ஏங்கித்தவிக்கின்றனை ? உனக்கு யார் இத்தகைய இன்னல்களைப் புரிந்தவர்? அன்னவரை எனக்கு அறிவிப்பாயேல் இப்பொழுதே உனை எனது அரண்மனைக் கழைத்துச்சென்று காப்பாற்றுவதுடன், அப்பாதகர்களையும் அதாலறதப் படுத்துகின்றேன். அஞ்சாதே, சீக்கிரம் தெரிவி

ஞானம். வ-ம்:—ஐயா !

ஞானசவுந்தரி விருத்தம். இராகம்—முகாரி.

எந்தனை காக்கவந்த வேந்தனே விபரஞ்சொல்வேன்
நிந்தனை புரிந்துயென்னை நிர்மூடி சிறியதாயார்
இந்தகோலத்திற் காளாய் எந்தனை முடித்துவைத்தாள்
சிந்தனை மிகவடைந்தேன் சிறுமியை காப்பீர்போற்றி.

ஞா. வம்:—அத்வான கானகத்தில் அனாதையாக அலறிப் புலம்பும் என்னை ஆதரிக்கவந்த அண்ணலே! அடியாள் விபரத்தை யுரைக்கின்றேன் அன்புகூர்ந்து கேட்பீராக. அதாவது, உத்தமமென சத்தியந்தவறாது எத்திக்கிலும் புகழும் உரோமாபுரியை ராஜரீகம் புரியும் தர்மராஜனின் புத்திரியாளுகும். என்னையீன்ற அன்னை யான் ஜெனித்த இரண்டாவது ஆண்டிலேயே இக்கரைவிடுத்து விண்ணுலகடைந்தாள். பிறகு எனது தந்தை திருநேத்ராபுரி மன்னனின் புத்திரியாகிய லேனாள் என்பவளை மறுதாரமாக அடைந்தாள். பிறகு என்னையும் அன்னவரின் சம்ரக்ஷணையிலேயே இருக்கவைத்தார், பின்பு தந்தை வேட்டைக்குச் சென்றார் சங்கதியறிந்த சண்டாளி லேனாள், என்னைச் செய்யொணா இம்சைகளை எல்லாம் செய்து, பிறகு யான் நித்திரையிலிருக்கும் சமயங்கண்டு என்னை இக் கதிக்காளாக்கினாள். இன்னும் அநேகமாயுரைக்க எனது வேதனையின் பொருட்டு மனதிடந்தாவில்லை. தவிரவும் எனக்கோ மயக்கமும் அதிகரிக்கின்றது, மற்றும் ஓர் விண்ணப்பம் இவ்வடியாள் தங்களைக் கேட்க வேண்டியிருக்கின்றது.

பிலேக். வ-ப்:—ஏ! பெண்ணே! என்ன விண்ணப்பம் சீக்கிரம் தெரிவி?

ஞா. வ-ம்:—அதாவது, வேறொன்றுமில்லை, அப்படிமுடிதான் சற்றேனும் முன்பின் ஆலோசியாது என்னை இத்தகைய கதிக்காளாக்கினும், தாங்கள் இவ்விஷயத்தை வெளியிடாது மனதில் வைத்து சந்தர்ப்ப மேற்படும் சமயம் தெரிவிப்பீரெனவும் இவ்வடியாள் கேட்டுக்கொள்கிறேன்.

பிலேந். வ-ம்:—ஆஹா! பெண்ணே! உனது துயருக்கு யான் உருகி வருந்தினும்? உனதரிவிற்கு ஓர் விஷயத்தில் எனதுள்ளம் குதூகலமே யடைகின்றது? ஆயினும், அரண்மனைக்கு வர தடையில்லையே?

ஞா. வ-ப்:—சகியொணா துயரைத்தீர்க்க கடவுள் போல்தோன்றி தாங்களரண்மனைக்கு அழைக்க தடை யுண்டா?

பிலேந். வ-ம்:—அடே! சேவக்.

சேவ. வ-ம்:—ஏனையா?

பிலேந்- வ-ம்:—அடே! நீ சென்று சேனைவீரர்களிலொருவனை எனது குதிரையுடன் இங்கு வரச்செய்வாய்.

[சேனைவீரன் குதிரையின் வர.]

பிலேக். வ-ம்:—அடே ! இப் பெண்மணியை ! அதிஜாக்கிரதையுடன் எனது குதிரைமீது எடுத்தமர்த்துவாய்.

சேனா. வ-ம்:—அப்படியே ! மகாபாக்கியம் ப்ரபூ.

[ஞானசவுந்தரியை குதிரைமீது தூக்கி வைத்துக்கொண்டு பிலேந்திரன் போய் விடுகிறான்.]

சீன்:—11] [இடம்:—லேனாள் அந்தப்புரம்.

கதாநாயகர்:—லேனாள், கொலையாளிகள்.

[லேனாள் அமர்ந்திருக்கிறாள் கொலையாளிகள் ஞானசவுந்தரியின் இரண்டு கரங்களையும் கொண்டு வருகின்றனர்.]

கொலை. வ-ம்:—தாயே! வேலையை முடித்துவிட்டோம். இதோ பாருங்கள் ஞானத்தின் கரங்களை.

லே. வ-ம்:—சபாஷ் ! கொலையாளிகளே ! உங்களின் சாமர்த்தியத்திற்கு மெச்சினேன்.

லேனாள் தரு.

மணமாலை யிட்டே என்ற மெட்டு.

நான் - நினைத்ததெல்லாம் எந்தன் மனப்படியே முடித்
தேனினி இடரொன்று மில்லை அவள்
என்றனுக் கருமை பிள்ளை அவர்
இதனை யறிந்தால் மிக தொல்லை இனி
எந்தன் மொழிக்கு எதி ரில்லை மன
தேங்காமல் பின் வாங்காமல் சாக்
கியம்பி காட்டிடுவேன் பல்லை—நான் நி

லேனாள் வ-ம்:—இப்பொழுது தான் என் மனது திருப்தியடைந்தது. ஆனால் என் நாதனும் வரும்வேளை யாகின்றது. இதற்குள் இக்கரங்களைப் புதைத்துவிட்டு, அரண்மனையில் விளையாடிக் கொண்டிருந்த ஞானசவுந்தரி காணமற் போனதாயும், அவளைத் தேடி தேடி ஆயாசமதிக மேற்பட்டு மனந்திகைத்து அமர்ந்து விட்டதாயும் பாசாங்கு செய்வோம் பிறகு எப்படியேனும் நடக்கட்டும் அடே ! கொலையாளிகளே ! இதைக்கொண்டுபோய் புதைத்து விடுங்கள். ஜாக்கிறதை மர்மம் தெரியப் போகின்றது.

[கொலையாளிகள் போகிறார்கள்.]

சீன்:—12.] [இடம்:—எகிப்பது தேச ராஜமாளிகை.

கதாநாயகர்:—பிலேந்திரன், ஞானசவுந்தரி, சகிகள்.

[பிலேந்திரன் ஞானசவுந்தரியை அழைத்துக்கொண்டு வருகிறான்.]

பிலேந் வ-ம்:—ஏ! தாதிப் பெண்களே!

தாதிகள் வ-ம்:—வந்தனம். அரசகுமாரா!

பிலேந் வ-ம்:—ஏ! தாதிப் பெண்களே! இதோ பார்த்தீர்களா? இக்கன்னிகைக்கு இரு கரங்களுமில்லை. ஆதலால், இக் கன்னிகையை உங்களின் சம்ரக்ஷணையில் வைத்து அதி ஜாக்கிரதையுடன்,

பிலேந்திரன் கண்ணி.

நல்வாக்கு நீகோடடி என்ற மெட்டு.

பாதுகார்ப்பீர் பாங்கிகளே பக்ஷமுள்ள தோழிகளே
யாதுங்குறை கூறாமலே ஆதரிப்பீர் தாதிகளே பா
அரசன் பெண்ணைப் பிறந்தாள்-சிற்-றன்னையால் துயரடைந்தாள்
கரமிரண்டு மிழந்தாள்—பெருங்—காட்டில் புரண்டழுதாள் பா
விதியின் வசத்தினாலே—கையை—வெட்டுண்டாள் காட்டினிலே
கதியின்றி இருந்தகாலே—இன்—கழைத்து வந்தேன் சேடிகளே பா
தகுந்த சிகிச்சை செய்வீர்—இவளை—தாழ்வின்றி ஆதரிப்பீர்
மிகுந்த இவ்வேதனையை—மீட்டு—சீக்ரமாகவே கார்ப்பீர் பா

பிலேந் வ-ம்:—தெரிகின்றதா? இப்பெண் ஒரு அரசனி புத்திரியாக பிறந்தும் தற்போது அனாதையாகி விட்டாள். இன்னவளை காப்பாற்றுவதுதான் உங்களுக்கு அதிக கீர்த்தியென்பதை யுணருங்கள். யான் என் தாய் தந்தையரிடம் செல்கிறேன். பெண்ணே! ஞானம்! இப்பாங்கியர்கள் உனக்கு வேண்டிய பணிவிடைகளைப் புரிவார்கள். சந்தோஷமாக இவ்விடத்திலேயே இரு.

ஞானம் வ-ம்:—அப்படியே சென்று சீக்கிரத்தில் வந்து விடுங்கள்.

சீன்:—13.] [இடம்:—லேனாள் அந்தபுரம்.

கதாநாயகர்:—லேனாள், தர்மராஜன், சேவகன்.

[லேனாள் வருத்தங் கொண்டவள்போல் அமர்ந்திருக்கின்றாள். தர்மராஜன் வருகிறார்.]

தர் வ-ம்:—கண்மணி! லேனா!

லேனாள் வ-ம்:—ஆ! பிராணகாதலா! வந்துவிட்டீரா? வனத்திலெங்கேனும் குழந்தை ஞானத்தை கண்டீரா?

தர் வ-ம்:—என்ன ! குழந்தை ஞானத்தையா ? ஐயோ ! அவளேன் அங்குவரப்போகின்றாள்? குழந்தைவனத்திற்குப்போகஒன்றும் காரணமில்லையே! சண்டாளி ! நீ குழந்தையை சரிவர கவனித்திருப்பாயேல் அன்னவள் வீட்டைவிட்டு வெளியிற் செல்வாளா ?

லேனாள் வ-ம்:—ஐயோ ! என்னநாதா இப்படி சோபித்துக் கொள்ளுகிறீரே? யானே தங்களின் புத்திரியை வெளியில் துரத்தி விட்டேனா ?

தர் வ-ம்:—என் குழந்தை ! ஏன் வெளியில் போகப்போகிறது.

லேனாள் தரு.

ஜப்தகலந்தரு என்ற மெட்டு.

வேண்டிய பணிவிடை வெகுவாகவே புரிந்தேன்
வெறுத்தவள் மஞ்சமதின் மேல் படுத்தாள்
ஆண்டவனின் விதியோ யான்பட்ட நன்றியெல்லாம்
அழிந்திடவே எந்தனை விடுத்துசென்றான்
ஐயோயானவளுக் கென்ன பாடுகள் பட்டேன்
ஆசையுற்ற பொருளெல்லாம் வாங்கி தந்திட்டேன்
அதிக துயர, முமேவே எனை
ஆளாகசெய்து அவளும் போனாளெங்கையோ வே

லேனாள் வ-ம்:—பட்ட பாடுகளெல்லாம் ஆற்றில் கரைத்த புளியாகிவிட்டது பார்த்தீரா ? யானென் தான் பாடுபட்டும் கடைசியில் யான்தானே பழிக்குக் காரணமானேன் ? தாங்கள் வனத்திற்குச் சென்றதுமுதல், பாவம் தாயற்ற பெண்ணாச்சுதே யென்றுவேண்டிய உபசாரங்களெல்லாம் புரிந்து, அவள் கேட்கும் பொருள்களை, தவணைசொல்லாமல் உடனுக்குடனே வாங்கி தந்து எவ்வளவோ செல்வாக்குடன் வைத்திருந்தேன், அன்னவள் ஓயா பிடிவாதமாக தங்கள் மீதே ஏக்கங்கொண்டு படுத்த படுக்கையாகவே இருந்தாள், இராத்திரி 12-மணி வரையில் குழந்தையினருகிலேயே இருந்து அன்னவளைத் தூங்கச்செய்துவிட்டு யானும் சற்று கண்ணயர்ந்தேன், பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் விழித்துப்பார்த்தேன் அருகிலிருந்த குழந்தை காணவில்லை, அதிலிருந்து இதுநேரம் வரையில் இந்த ஊர் முழுதிலும் தேடியலைந்தேன் அன்னவளிருக்குமிடத்தின் விபரம் தெரியவில்லை ! அதின்பொருட்டு மிகுந்த ஆயாசத்துடன் இவ்விடம் இப்பொழுதுதான் வந்தமர்ந்தேன், தாங்கள் இந்த விபரங்களையெல்லா மறியாமல், வீணில் இப்படி இவ்வடியேனை நிந்திக்கின்றீரே ? இது தங்களைப்போன்ற மன்னர்களுக்கும் நியாயந்தானா !

தர். வ-ம்:—சட் ! பாதகி !

தர்மராஜன் தரு.

அப்படியே செய்துவருவேன் என்ற மெட்டு.

பல்லவி

பாசாங்கெல்லா மறிவேனடி உந்தன்
பகட்டு வார்த்தையை யிங்கே அதட்டிப் படிக்காதடி பா

அநுபல்லவி.

மோசம் புரிந்துயெந்தன் மகளை எங்கே துரத்தி
நாசம் புரிந்தாயோடி நாரிநீ யுரைப்பாய்தி பா

தர். வ-ம்:—சண்டாளி!

தர்மராஜன் தரு.

ஐயோ மகனேநீ என்ற மெட்டு.

பாதகியே பெருங் காதகியே மகள்
போனதெங்கே சொல்லடி எதிர் நில்லடி பதில்விள்ளடி
பதருதே மதி சிதருதே மதி சிதருதே சி சி பா

லே. வ-ம்:—நாதா! இப்படியெல்லாம் வீணான சந்தேகங்க ளெல்லாம் சந்தேகிக்க வேண்டாம். நமது குழந்தையாகிய ஞானமிருக்கின்றாளே, அவள் தாங்கள் கானகம் சென்றதும் அதிக துன்பமுற்றாள், அதற்கு யானவளை தேருதல் படுத்தினேன் பிறகு,

லேஞள் ஷை மெட்டு.

உண்டா ளிருந்தா ளரண்மனை தன்னிலே
பள்ளிகொண்டாள் நாதா புகழ்வேதா இன்னும்வாதா
மங்கையே போனாளெங்கேயோ போனாளெங்கேயோ உ

தர். வ-ம்:—என்னடி இது? நீ யுரைப்பது மகா விந்தையாயிருக்கின்றது? அப்படி எனதருந்தவச் செல்வியாகிய ஞானத்திற்கு,

தர்மராஜன் ஷை மெட்டு.

உண்மையுடன் மெத்த உபசாரனை செய்தால்
என் மகள் போவாளா தளர்வாளா அகல்வாளா
ஓதடி எங்கே ஓதடி எங்கே ஓதடி ஓ ஓ பா

தர். வ-ம்:—சண்டாளி! உண்மையை யுரைக்காவிடில் இதோ இந்த கட்கதிற்கு உனை ஆளாக்குவேன், சங்கதியை சீக்கிரம் தெரிவிப்பாய்.

லேஞள். வ-ம்:—நாதா! என்ன தாங்கள் இப்படி கோபித்துக் கொள்கின்றீரே? அத்தகைய பாவியா யான்? அப்படி தங்களுக்கு என்மீது சந்தேகமிருக்குமாயின் இப்பொழுதே தூதர்களை ஏவி குழந்தை ஞானத்தை தேடி பிடித்து வரச் சொல்லுங்கள், பிறகு

அன்னவளின் வாய் மொழியைக் கேட்டு தப்பிதத்திற் கேற்றவாறு தண்டனை யிடுங்கள், அதற்குட்பட யான் சர்வசித்தமாக இருக்கின்றேன்.

தர். வ-ம்:—சரி ? அடே ! சேவக் !

சேவ. வ-ம்:—அரசே ! பாரக். அழைத்த காரணம் யாது ?

தர். வ-ம்:—அடே ! நீ சென்று தூதர்களை ஏவி இவ்வூர் முழுதிலும் சுற்றி நமது குழந்தை இருக்குமிடத்தைத் தெரிந்து அழைத்துவரச் செய்வாய்.

சேவ. வ-ம்:—அப்படியே மகா பாக்கியம் ப்ரபூ.

[சேவகன் போகிறான்.]

சீன்:—14] [இடம்:—எகிப்த்துதேச அரண்மனை.

கதாநாயகர்:—சிமியோன், மதலை, பிலேந்திரன், சேவகன்.

[சிமியோனும் மதலையும் பிலேந்திரனின் விவாக விஷயத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர்.

சிமி. வ-ம்:—பெண்மணே ! நாமந்த ஏகநாதனின் கிருபா கடாக்ஷத்தினால் ஈன்றெடுக்கப்பெற்ற வத்ஸனாகிய பிலேந்திரனுக்கு, யௌவனப் பருவ மேற்பட்டும் இதுநாள் வரையில் அன்னவனுக்கு விவாகம் செய்து வையாதிருப்பதின் பொருட்டு என் மனது ஒருவாறு சிந்தனை யுருகின்றது உன தபிப்பிராய மென்ன ?

மதலை. வ-ம்:—பிராணகாந்தா ! எனக்கும் நெடுநாட்களாக அதே கொள்கைதான், ஆயினும் தங்களின் கருத்துபடி செய்யுங்கள்.

சிமி. வ-ம்:—காதலி ! விவாக விஷயமென்றால் சாமான்யமல்ல. தவிர இது விஷயத்தை நமது புத்திரனிட முரைத்து அன்னவனின் மனக் கொள்கையும் அறிய வேண்டியிருக்கின்றது. ஆதலால், அடே! சேவக்! நீ சென்று பிலேந்திரனை இங்கு அழைத்து வருவாய்.

[சேவகன் போகிறான் பிலேந்திரன் வருகிறான்.]

பிலேந்திரன் தரு.

ராமா சுகநாமா என்ற மெட்டு.

பல்லவி

பணிந்தேன் பாதம் பணிந்தேன் உங்கள்
பாலன் பிலேந்திரன் யான் சிலமுட னுங்களை . ப

அநுபல்லவி

கனிந்து யெனையழைத்த காரணந்தன்னை
கபடமின்றி யுரைப்பீ ரையா—தினம்
கழலடியைப் பணிந்தேன் துய்யா—சித்தங்
கலங்காதிர் மன மிலங்காதீர் பாலன் ப

பிலேக். வ-ம்:—மானிலந்தன்னில் மாபெருந்தவத்தில் தனை மைந்தனையடையப்பெற்ற மாதாபிதாக்களே மைந்தன் நமஸ்கரிக்கின்றேன்.

சிமி. வ-ம்:—சபாஷ்! சந்தோஷம், குழந்தாய்! கல்யாண் எழுந்திரு. உன்னையழைத்ததின் காரணம் உனது நன்மைக்கே, ஆயினும், உனது மனவிருப்பத்தை அறிய வேண்டியிருப்பதால் இவ்விடத்தில் உன்னையழைத்தேன். அதாவது,

சிமியோன் விருத்தம். இராகம்—கமாஸ்.

மைந்தனே உனக்குயாங்கள் மணமது புரிந்துவைக்க
சிந்தையில் நினைந்தேயிங்கு சீக்கிரமழைத்தோமப்பா
உந்தனின் உள்ளந்தன்னில் உறுதியாய் கொண்டசேதி
நிந்தனை யின்றியென்முன் நிகழ்த்துவாய் நிகழ்த்துவாயே.

பிலேக். வ-ம்:—பிதா! தந்தைசொல்மிக்க மந்திரமில்லை, தாய் சொற்றுறந்தாற் வாசகமில்லை எனும் முதுரைக் கிணங்க தங்களின் கொள்கைக்கு மாறுபாடாக நடப்பதுதானோ சேயர்கட்கழகு? ஆதலால் தங்களின் மனப்படியே செய்துவையுங்கள். ஆனால் மணமகளை எங்கு நேமித்திருக்கின்றீர்?

சிமி. வ-ம்:—வத்ஸா! உனது தாய் மாமனின் குமாரத்தியோ, தற்போது கல்வியிற்சிறந்து, அழகில் நிறைந்தும் விளங்குகின்றாள் ஆதலால் அன்னவளை தான் உனக்கு மனைவியாக நியமிக்கலாமென என்மனது ஒருவாறு சம்மதப்படுகின்றது.

பிலேக்: வ-ம்:—ஐயா! பிதா! இதென்ன விபரீதம்? வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்யிற்கலையும் பாவனைபோல் நமது வீட்டிலேயே அழகில் இரதியையும் நிகர்க்கச்செய்யும் கன்னிகையிருக்க இதைவிடுத்து வேறெங்குசென்று பெண் தேடப் போகின்றீர்?

மதலே. வ-ம்:—குழந்தாய்! யார்? அன்று காட்டிலிருந்து இருகரமுமிழந்த ஒருகன்னிகையை கொண்டுவந்தனையே அன்னவளையா மணந்துக்கொள்ளப் போகின்றாய்?

பிலேக். வ-ம்:—தாயே! அன்னவளை விடவா வேறு பெண்ணை யான் மனைவியாக அடையவேண்டும்? அப்படிக்கொன்றும் என் மனதிடந்தராது.

சிமி. வ-ம்:—புத்ரா!

சிமியோன் தரு.

கானகத்தில் கண்ட என்ற மெட்டு.

கரமிரண்டு மில்லா ஞானசவுந்தரியாள்
கலியாணத்திற்குதவாள் என் மைந்தா
கலியாணத்திற்குதவாள் கம்.

மாபிமானர்கள் கண்டால் மார்க்கம் பலவாராய்
மானிலத்தி லுரைப்பார் என் மைந்தா
மானிலத்தி லுரைப்பார் க

பிலேந். வ-ம்:—பிதா! தாங்கள் இப்புவியிலுள்ளோர்களின் கோக்கா நோக்கங்களை யறிந்து அரசுபுரியும் மன்னவராக இருந்தும் இது விஷயத்தில் இவ்வித முறைப்பது ஒழுங்கல்ல? ஆதலால்,

பிலேந்திரன் ஒடி மெட்டு.

காமில்லா விட்டாலும் காருலகிலந்த
கன்னியையே மணப்பேன் என் ஐயா
கன்னியையே மணப்பேன் ஒன்றும்
குறையுரையாதிந்த குழந்தையை மன்னித்து
கலியாணம் செய்துவைப்பீர் என் ஐயா
கலியாணம் செய்து வைப்பீர் க

சிமி. வ-ம்:—குழந்தாய்! சகல விதமாக கல்விகளையும், ராஜ நீகத்திற் குண்டான நற்செய்கைகளையும் நன்குணர்ந்தும், தற்போது எனது மொழியை தடுத்து வார்த்தையாடுகின்றனையே? வேண்டாம், எனது மொழியைக்கேள், கானகத்தில் கிடைக்கப்பெற்ற ஞான சவுந்தரியையும் விடவேண்டாம் அவளுக்கும் நமது ஜீவியகாலம் வரையில் அதிக செல்வாக்குடன் சம்ரக்ஷணை புரிந்து வருவோம், அதை தவிர்த்து இப்படியெல்லாம் வீண்வாது புரியவேண்டாம். ஆதலால்,

ஏனோ என்மேல் பழி சுமத்துவீர் என்ற மெட்டு.

சிமி:—மைந்தா ஏனோ மனம் வெறுக்கின்றாய்
பிலே:—தந்தையே நீர் ஏனோதடுக்கின்றாய்
சிமி:—காங்களு மில்லையே
பிலே:—குறையொன்று மில்லையே
சிமி:—காருலகினிலே இது சிறுள்ள விவாகமல்ல மை

சிமி. வ-ம்:—புத்ரா! இவ்வுலகினிடமாக அழகிலும் அறிவிலும் சிறந்து விளங்கும் அணங்குகள் அனேகரிருக்க,

சிமியோன் தரு.

பசியாலுடல் மெலிந்தேன் என்ற மெட்டு.

திக்கொருவரில்லை ஞானம் தன்னை கண்டால் தொல்லை
மிக்கவே யென் சொல்லை கேட்டால் மைந்தா துயரில்லை தி

பிலேந். வ-ம்:—பிதா! அப் பெண்மணிக்கா திக்கில்லை? அப் பெண்மணியோ ஓர் பெரிய அரசபுத்திரியாகும், அவ் விர்த்தாந்தங்களை யுரைக்க தற்போது சந்தர்ப்பமில்லை, ஆயினும் அதின் விபரங்களை பிறகு தெரிவிக்கின்றேன், அப்படி அவள் திக்கற்றவளாயினும்,

ஆதியில் யான் அன்னவனுக்கு கானகத்தி லளித்த உறுதிமொழிப் படியே,

பிலேந்திரன் ஷெடி மெட்டு.

மணம் புரிந்து வாழ்வேன் இதின் மார்க்கத்தினால் தாழேன்
குண மிகுந்திலகும் அந்த கோதை மொழி தவறேன் ம

சிமி. வ-ம்:—புத்ரா! வேண்டாம், இவ்வுலகின்கண் நம்போன்ற அரச குமாரர்களும், எகிப்து தேசத் தலைவனின் குமாரனாகிய பிலேந்திரனென்பவன், இரண்டு கரங்களுமில்லாத ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண் டிருக்கின்றானென பல விதத்திலும் ஏளனம் புரிவார்கள். தவிர, மற்ற வேறு அரசர்கள் யார் வீட்டிலேனும் பெண் கொள்வோமாயின் வேண்டிய சீர்சிறப்புகள் நடக்கும், அதைவிட்டு வீணில் திக்கற்ற மாதை திருமணம் புரிந்துக்கொள்வதாக தெரிவிக்கின்றனையே? குழந்தாய் வீண் பிடிவாதம் செய்யாதே தவிர அப் பெண்மணியையும் விடாதே! அன்னவனுக்கும்,

சிமியோன் ஷெடி மெட்டு.

அன்னவஸ்த்ர மளித்து அவளை ஆதரிப்பாய் களித்து
என் வார்த்தையை வெறுத்து நீ இயம்புவதை நிறுத்து நி

பிலேந். வ-ம்:—பிதா! தங்களின் வார்த்தையை வெறுத்து பேசப்படாதுதான். ஆனால், திக்கற்ற பெண்மணியாகிய என தன் பார்த்த ஞானத்தின் விஷயத்தில் மாத்திரம்,

பிலேந்திரன் ஷெடி மெட்டு.

என்ன உரைத்தாலும் மன தேற்கா தினிகேளும்
பெண்மடவாள் தன்னை விட பார்த்திடே னென்றனும் ம

பிலேந். வ-ம்:—தந்தையே! மனதில் ஓர்வித இயக்கமுமின்றி இவ்வடியேன்மீது அன்புகூர்ந்து அப் பெண்மணியையே விவாகம் செய்துவையுங்கள் பிறகு என் கதி எவ்விதம் நடப்பினும் நடக்கட்டும்.

மதலே. வ-ம்:—காதா! குழந்தையோ புத்தியிற் சிறந்தவன். அவனறியாத விஷயமொன்றுமில்லை. ஆனால் இது விஷயத்தில் ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டுதான் இவ்வளவு தர்க்கித்துப் பேசுகிறான். அன்னவனின் மனக் கொள்கையை மறுக்காதிர்கள்.

சிமி. வ-ம்:—குழந்தாய்! அப்படியே உன திஷ்டப்படி செய்துக்கொள், பிறகு எங்களை நிந்தியாதே? சரி சீக்கிரம் விவாகத்தின் சம்பந்தமான காரியங்கள் விரைவில் நடக்கட்டும்.

பிலேந், வ-ம்:—அப்படியே பிதா.

[பிலேந்திரன் போகின்றான்.]

ஸீன்:—15.] [இடம்:—மாதாகோயில்.

கதாநாயகர்:—பாதிரியார், பிலேந்திரன், ஞானசவுந்தரி,
மற்றும் சில பந்துக்களும்.

[அனைவரும் ஜெபம் செய்துக்கொண்டிருக்கின்றனர். பிலேந்திரனும் ஞானசவுந்திரியும் ஜெபம் செய்துக்கொண்டிருக்கின்றனர், பாதிரியார் வருகிறார்.]

பாதிரி. வ-ம்:—சகல ஜீவாத்மகராகிய கடவுளானவர் பல ஜீவராசிகளையும் சிருஷ்டிக்க நினைத்து, ஆதியில் நமது கிரிஸ்தவ மதம் மேனுக்குமேல் வளர்ந்தோங்கும் பொருட்டு, ஆதாம், ஏவாள் என்னும் இருவர்களையும் சிருஷ்டித்து, அவர்களைக்கொண்டு நமது மதம் மேனுக்குமேல் செழித்தோங்க ஆண் பெண் இருவர்களுக்கும் விவாகமென்னும் ஓர் உபகாரியத்தை சம்பந்தப்படுத்தியிருக்கின்றார்.

மற்றவர். வ-ம்:—ஆம். [யாவரும் வணங்குகின்றனர்.]

பாதிரி. வ-ம்:—எனதன்புள்ள பிலேந்திரா! உனது மனசாக்ஷிக்குருதியாகவும், சாக்ஷாத் சர்வேஸ்வரனறியவும், இங்கு வந்திராநின்ற உமது மாபினர்களும், ஊரினர்களு மறியவும், உண்மையில் இந்த ஞானசவுந்தரியை மணம் புரிந்துக்கொள்ள விருப்பமுறுகின்றாயா?

பிலேந். வ-ம்:—ஆம், விருப்பமே.

பாதிரி. வ-ம்:—அம்மா! ஞானம்! உன் மனக் கொள்கையின் உறுதிப்படியும், இங்கு விஜயஞ்செய்துள்ள உனது குடும்பத்தினர்களறியவும், நமது தேவமாதா அறியவும், இந்த பிலேந்திரனையே விவாகம் புரிந்துக்கொள்ள இச்சைப்படுகின்றனையா?

[ஞானசவுந்தரி ஆமென்று தலையையசைக்கின்றாள் பிறகு விவாகம் நடக்கின்றது.]

பாதிரி. வ-ம்:—எனதன்பார்ந்த நண்பர்களே! உண்மையில் இவர்களிருவரும் மனப்பூர்வமாக சம்மதித்து செய்துக்கொண்ட விவாக விஷயத்தைக் கடவுள் அருகிருந்து காத்து ரக்ஷிப்பாராக.

[பூஜை நடக்கின்றது சகலரும் ஜபம் முடித்து அவரவர் இல்லத்திற்குப் போகிறார்கள்.]

ஸீன்:—16.] [இடம்:—சிமியோன் அரண்மனை.

கதாநாயகர்:—சிமியோன், பிலேந்திரன், தூதுவன்.

[சிமியோனும் பிலேந்திரனும் அமர்ந்திருக்கின்றனர் அதுசமயம் தர்மராஜனின் தூதன் லிகிதம் கொண்டு வருகிறான்.]

தூதன். வ-ம்:—அரசே! அடியேன் வந்தனம்.

சிமி. வ-ம்:—காரண மென்ன?

தூத. வ-ம்:—அரசே! தங்களுக்கு தர்மராஜா லிகிதம் தந்தனுப்பினார்.

சிமி. வ-ம்:—வத்ஸா! இந்த லிகிதத்தின் விபரம் யாதெனகவனி?

[பிலேந்திரன் லிகிதத்தை வாசிக்கிறான்.]

விருத்தம். இராகம்—காம்போதி.

தன்மைசேர் எகிப்துதேசம் தாளும் சிமியோன்மைந்தன்
பின்னமில்லாத நண்பன் பிலேந்திர னறியும்சேதி
என்னவென் றாலேசுல்தான் என்மீது யுத்தத்திற்கு
உண்மையாய் வந்ததாலே உதவிட வேண்டினேனே.

கனந்தங்கும் எகிப்து தேசத்தரசராகிய சிமியோன் மன்னரின் புத்திரராகிய, பிலேந்திரருக்கு அதிக வந்தனம் செய்து எழுதும் லிகிதத்தின் விபரமாவது யாதெனில், துர்க்கி சுல்தா னென்பவன் யாதொரு காரணமுமின்றி எனது நகர்க்குள் புகுந்து படையெடுத்து வந்திருப்பதால் இத்தருணம் எனக்குதவி புரிய வருவீராகில் இக்கன்றியை எனதாயுளுள்ள வரையில் மறவேன். இது சத்தியம்.

இப்படிக்கு,
உரோமாபுரிக் கதிபனாகிய,
த ர் ம ரா ஜ ன்.

பிலேந். வ-ம்:—பிதா! ஆலோசிப்பதில் பயனொன்றுமில்லை, அபயமென அடைந்தவரை ஆதரிக்க வேண்டியது சகஜமே, ஆகலால் அடியேனுக்கு உத்திரவளியுங்கள், சென்று வருகிறேன்.

சிமி. வ-ம்:—மைந்தா! உண்மைதான். ஆனால்,

சிமியோன் தரு.

மேரே சமுஜாயுரே என்ற மெட்டு.

பல்லவி.

சிறுபாலன் போர் செய்யவே போகலாமோ சி

அநுபல்லவி.

ஆலாகோலபடுத்த அகுமோ பாலகனே
ஆகாது ஆகாதோடா என் சிலனே சி

பிறந்த இது நாள் வரை புரிந்தறியாயே யுத்தம்
புத்திரா நீ சென்றிட தாமேனோ சித்தம் சி
தார்க்கி சுல்தானவன் தனிகா யிருந்தவீரன்
தாஜங்கொண்டு எதிர் சென்றிடில் தும்சம்செய்வான் சி

சிமி. வ-ம்:—ஆதலால் புத்திரா! நீ மாத்திரம் தனிமையாக போகவேண்டாம் நமது சேனைவீரர்களில் சிலரை படைத்துணையாக வாவது அழைத்துச் செல்.

பிலேக். வ-ம்:—பிதா! அப்படிக்கல்ல! அங்கு சேனைவீரர்க ளனேக ரிருக்கலாம் அதின் ஆதரவைக்கொண்டே வெற்றிப்பெற்றே வரு கிறேன். தாங்கள் ஒன்றுக்குமஞ்சாது விடைதாருங்கள்.

சிமி. வ-ம்:—மைந்தா! அப்படியாயின் ஜாக்கிரதையுடனே அதிசீக்கிரத்தில் வெற்றிபெற்று வருவாய்.

[பிலேந்திரன் போகிறான்.]

சீன்:—17.] [இடம்:—ஞானசவுந்தரி அந்தப்புரம்.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, பிலேந்திரன்.

[ஞானசவுந்தரி அமர்ந்திருக்கின்றாள் பிலேந்திரன வருகிறான்.]

ஞா. வ-ம்:—பிராணேசா! அடியாள் நமஸ்கரிக்கின்றேன். தவிர, ஏது தாங்கள் இன்று இத்தகைய தியக்கத்துடன் இங்குற்றது? காரணத்தை தெரிவியுங்கள் நாதா!

பிலேந். வ-ம்:—பெண்ணே! அத்தகைய காரணமொன்று மில்லை. அதாவது, உனது தந்தையார் தனது நாட்டில் தார்க்கி சுல்தானென்பவன் படையெடுத்து வந்துள்ளதாயும் அதற்கு யான் படைத் துணையாக வரவேண்டுமென்பதாயும் லிகிதமனுப்பினார். யான் சென்று வர உத்திரவு பெற்றுபோக வந்தேன்.

ஞா. வ-ம்:—ஐயோ! காதலா! இச் சண்டாளியை மணம்புரிந்த அதிர்ஷ்ட வசமா இது? ஐயோ! இங்கு யான் பூர்ண கர்பவதியாக இருக்க, தாங்கள் யுத்தத்திற்குப் போகவென்றால் விடையளிக்க எனதுள்ளம் எவ்வித மிசையும், ஹா! ஏசுநாதா! இச்செய்தியைக் கேட்டதும் எனதுள்ளம் பதருகின்றதே?

பிலேக். வ-ம்:—பெண்ணே! யுத்தகளத்தில் அப்படிக்கொன்றும் இடையூறுகள் சம்பவியுமென சித்தத்தில் கிஞ்சிற்றேனும் நினையாதே. தவிர,உனது பிரசவ காலத்தில் யானில்லாவிடினும் உனக்கு தகுந்த சிகிச்சை புரிய எனது தாய் தந்தையரிருக்கின்றனர். அதுவு மன்றி சகிமார்களிருக்கின்றனர் அப்படிக் கிருக்க ஏன் இது விஷயத்தில் சிந்தனையுருகின்றனை? நீ யாதொன்றுக்கு மஞ்சாதே. கடவுளை நம்பினோர் கைவிடப்படார், ஆதலால், எல்லாம் வல்ல இறைவன் துணையிருப்பார். யான் சென்று வருகிறேன்.

[பிலேந்திரன் போகிறான்.]

சீன்:—18.] [இடம்:—அமர்களம்.

கதாநாயகர்:—தர்மராஜன், பிலேந்திரன், துர்க்கிசுல்தான், துர்க்கிசுல்தானின் சேனைகள், தர்மராஜனின் சேனைகள்.

[பிலேந்திரன், தர்மராஜன் இவர்களும் தனது சேனைகளும் துர்க்கி சுல்தான் மீது யுத்தம் புரிகின்றனர், அதில் தர்மராஜனின் சேனைகள் சற்று பின் வாங்குகின்றனர்.]

தர். வ-ம்:—என்ன இது? பிலேந்திரரே! இப்படி எதிரிகளின் கூட்டம் ஒரே கூட்டமாக கூடி, சகல ஆயுதங்களுடன் எதிர்த்து போர்புரிகின்றனர். நமது ஆயுதங்கள் முற்றும் யுத்தத்தில் முறிந்து போய் விட்டது இதற்கென்ன செய்வது?

பிலே. வ-ம்:—ஐயா! தர்மபூபனே! நாம் வீணில் இதற்காக புறமுதுகிட்டோடுவோமானால் எதிரிகள் நம்மை பலவிதமாய் ஏளனம் புரிவார்கள். ஆதலால், சற்று நமது மரபினர்க்கு கண்கண்ட தெய்வமாய் விளங்காநின்ற ஏசுநாதனை துதிப்போம் அன்னவர் நம்மை எவ்வழியில் விட்டாலும் விடட்டும்.

[பிலேந்திரனும் தர்மராஜனும் ஜெபம் செய்கின்றனர். அந்தர மார்க்கமாய் சம்மனசுகள் தோன்றி பிலேந்திரன் கரத்தில் மந்திர வாளை ஈகின்றது அதைக்கொண்டு மறுபடியும் யுத்தம் புரிந்து எதிரிகளை சிறைப்படுத்துகிறான்.]

பிலே. வ-ம்:—ஐயா! தர்மபூபதியே! தாங்கள் கோரிய கொள்கை பலித்தது, சத்ராதிகளும் தோல்வியுற்றனர். இனியான் என தூருக்குச்செல்கின்றேன் சீக்கிரம் விடைதாருங்கள்.

தர். வ-ம்:—பிலேந்திரா! எனக்கித்தகைய ஆபத்தை யகற்றி தற்போது இப்படியே உமதூருக்குச்செல்வது நன்கன்று. ஆதலால், எனதரண்மனைக்கு தாங்கள் விஜயஞ்செய்து சிலகாலமிருந்து பிறகு செல்லவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிலே. வ-ம்:—சரி வாருங்கள் செல்வோம்.

[அனைவரும் போகின்றார்கள்.]

சீன்:—19.] [இடம்:—ரோமாபுரி அரண்மனைவாசல்.

கதாநாயகர்:—லேனுள், தூதுவர்.

[தூதர்கள் எகிப்து தேசத்திலிருந்து லிகிதம் கொண்டு வருகின்றனர், லேனுள் அந்த தூதர்களைக் கண்டதும்.]

லேனுள். வ-ம்:—அடே! யாரடா நீங்கள்? அரசன் அரண்மனையாயிற்றே என்று கொஞ்சமேனும் கவனியாது செல்கின்றீர்கள்

தூதர். வ-ம்:—தாயே! மன்னிக்கவேண்டும். வேரொன்றுமில்லை, எங்கள் இளவரசர் இங்கு வந்திருக்கின்றார், அன்னவரின் மனைவியாள் இருகுழந்தைகள் பெற்றாங்கோ, அதை தெரிவிக்க விகித மெடுத்து வந்தோம்.

லேனுள். வ-ம்:—என்னடா இது? ஆச்சரியம்! இளவரசருக்கு விவாகமாய்விட்டதா? எங்களுக்கு ஒருவார்த்தையேனு முறையாமல் எப்படியோ விவாகம் செய்துக்கொண்டாரே?

தூதர். வ-ம்:—இல்லை தாயே! சில நாளைக்குமுன் யாங்களும் எங்களிளவரசரும் கூடி வேட்டைக்குச்சென்றோம். அந்த கானகத்தில் யாரோ ஒரு பெண் இருகைகளையுமிழந்து இரத்தவெள்ளத்தில் புரண்டழுதுக்கொண்டிருந்தாள் அதைக்கண்ட இளவரசர் அப்பெண்ணை, தனதரண்மனைக்குக்கொண்டுபோய் தகுந்தபடி சிகிச்சைகளைச்செய்து, பிறகு தானே தன் தாய் தந்தையரை வர்ப்புருத்தி அம்மங்கையை மணந்துக்கொண்டார். அந்தம்மாதான் இப்போது இரண்டு குழந்தை குளிகுளிச்சிருக்காங்கோ!

லேனுள். வ-ம்:—சண்டாளி! இன்னுமா ஒழியவில்லை? ஆஹா! அப்பாதக கொலையாளிகள் செய்த படுமோசமே மோசம். ஆம் இதற்கென்னசெய்வது? எப்படியும் இச்செய்தி எனது நாதனுக்குத் தெரியதான்போகின்றது. பிறகு அதுவிஷயமாய் அவர்கரத்திலிருக்கும் கட்கத்திற்கு நான் பலியாகதான் போகிறேன். ஆயினும், இன்னும் பார்க்கலாம். அடே! தூதர்களே! நீங்கள் திரும்புங்கால் இங்கு வந்து என்னைக்கண்டுவிட்டுச்செல்லுங்கள்.

தூதர். வ-ம்:—அப்படியே மகாபாக்கியம் தாயே.

[தூதர்கள் போகிறார்கள்.]

சீன்:—20.] [இடம்:—அரசன் சபாமண்டபம்.

கதாநாயகர்:—தர்மராஜன், பிலேந்திரன், தூதர்கள்.

தர். வ-ம்:—என்ன பிலேந்திரா? ஒருவாறு வாட்டமுற்ற முகத்துடனிருக்கின்றாய்?

பிலே. வ-ம்:—தர்மபூபதி! வேரொன்றுமில்லை, எனது மனைவியின் பிரசவகாலம் நெருக்கமாகவும், எனைப்பிரிய மனம் சகியாமலும் வற்புருத்தினள் அதற்குயான் தடுத்து வந்தேன், இவ்வளகாலமாக இன்னும் சங்கதியொன்றும் தெரியவில்லை, அதின் பொருட்டுதான் என் மனது ஒருவாறு சிந்தனையுறுகின்றது.

தர். வ-ம்:—என்ன? மனைவியரா? எப்பொழுது தங்களுக்கு விவாகமானது? எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை?

பிலே. வ-ம்:—தர்மராஜனே! தெரிவிக்க சந்தர்ப்பப்படவில்லை, அது விஷயத்தில் மன்னிப்பீராக.

[இதற்குள் தூதர்கள் வருகிறார்கள்.]

தூதர். வ-ம்:—இளவரசே! தூதர்கள் நமஸ்கரிக்கின்றோம், இதோ லிகிதம்.

[பிலேந்திரன் லிகிதத்தை பிரித்துப்பார்த்து.]

பிலே. வ-ம்:—ஹா! இப்பொழுதல்லவோ தன்யனானேன். தர்மராஜா அவர்களே! எனது மனைவி இரு குழந்தைகளை ஈன்றனள். ஆதலின் தூதுவரே. ஓர் லிகிதம் எழுதித் தருகிறேன் அதை எனது தந்தையரிடம் தருவீர்.

தூதர். வ-ம்:—அப்படியே செய்கிறோம் ப்ரபூ!

[பிலேந்திரன் லிகிதம் வரைகிறான்.]

விருத்தம். இராகம்—கேதாரகௌளம்.

தந்தையே தனையனுன்றன் றாளடி பணிந்துநின்றேன்
விந்தையாய் வரைந்தசேதி விவரமே யறிவீரையா
எந்தனின் மனைவிமக்கள் யாதொரு குறையுமின்றி
சந்தோஷமாக காப்பீர் ஜடுதியில் வருகுவேனே.

இப்படிக்கு,
தங்களருந்தவச் சுதனாகிய,
பிலேந்திரன்.

பிலே. வ-ம்:—அடே! தூதர்களே! இந்த லிகிதத்தை எனது தந்தையிடமளிப்பீர்.

தூதர். வ-ம்:—அப்படியே ப்ரபூ!

[தூதர்கள் போகிறார்கள்.]

சீன்:—21.] இடம்:—லேனாள் அந்தபுரம்.

கதாநாயகர்:—லேனாள், தூதர்கள், சேவகன்.

[தூதர்கள் வருகிறார்கள்.]

லே. வ-ம்:—அடே! தூதர்களே! இளவரசனிடம் சங்கதிகளையுரைத்தீர்களா?

தூதர். வ-ம்:—தெரிவித்தோம், யாங்கள் கொண்டுபோன லிகிதத்திற்கு பதில் லிகிதமும் அளித்தார், இதோ பாருங்கள்.

லே. வ-ம்:—அடே! சேவக! நீ சென்று இவர்களுக்கு வேண்டிய லாகிரி வஸ்துக்களை தருவித்துக் கொடுப்பாய்.

சேவ. வ-ம்:—சித்தப்படியே அம்மணி!

[சேவகன் தூதர்களுக்கு லாகிரி வஸ்துக்களை அளவின்றி கொடுக்க அதை அருந்தியதும் தனது நிலைதவறி தரையில் சாய்ந்துவிடுகின்றனர்.]

லே. வ-ம்:—ஆஹா! இதுதான் தக்க சமயம், லிகிதத்திலென்ன வரைந்திருக்கின்றதென கவனிப்போம்.

[லிகிதத்தைப் பிரித்துப் பார்க்கின்றான்.]

லே. வ-ம்:—என்ன சந்தோஷம், குழந்தைகளையும், தாயையும் அதிக ஜாக்கிரதையுடன் காப்பாற்ற வேண்டுமாமே. ஐயோ பாவம் என்ன கனிவு? என்ன சந்தோஷம்? சரி இதோ இதற்கு நேர் விரோதமான லிகிதமொன்று வரைந்து இதற்கு பதிலாக வைத்து தூதர்களை எழுப்பித் துரத்திவிடுகிறேன், பிறகு எக்கதியாயினு மாகட்டும்.

[வேறு லிகித மெழுதி வைத்து விட்டு பிலேக்திரான் கொடுத்த லிகிதத்தை அபகரித்துக்கொண்டு தூதர்களை எழுப்பித் துரத்தி விடுகிறான்.]

சீன்:—22.] [இடம்:—சிமியோன் அரண்மனை.

கதாநாயகர்:—சிமியோன், தூதர்கள்.

[சிமியோன் அமர்ந்திருக்கிறார் தூதர்கள் லிகிதம் கொண்டுவந்து தருகிறார்கள் சிமியோன் லிகிதத்தைப் பார்த்து.]

சிமி. வ-ம்:—ஹா! என்ன இது?

சிமியோன் தரு.

அன்னமே நான் தாலிகட்டி என்ற மெட்டு.

என்ன குற்றத்தைக் கண்டான் இவ்விதம் லிகிதம் தந்தான்
ஏதொன்று மறிந்திடாத ஞானசவுந்தரியையும்
அன்புடனே யீன்ற சிறு அழகுடைய பாலரையும்
அரும் வுயிரை கொல்ல லென்றான் அடவிதனில் கொண்டு சென்று
அங்கம் வாடுதே சந்
சல மாகுதே இதை
யாரிடத்திலே யுரைத்து தேரிடுவேன் யான் மனது ஏ

சிமி. வ-ம்:—ஐயோ! குழந்தைகளை யீன்று சில நாளைக்குள்ளாகவே இத்தகைய கொடுமை எப்படி என் மனது துணிந்து செய்வேன். ஆ! விதியே! அப்படி இதை தடுத்து அரண்மனையிலேயே வைத்திருப்பினும் மைந்தன் அரண்மனை வாயற்படியையும் மிதியேனென்று லிகிதமனுப்பி யிருக்கின்றான். ஆயினும், என்ன செய்வது? மகன் சொல்லையும் மீறுதற்கு முடியவில்லை, ஞானசவுந்தரியையும் அவளது குழந்தைகளையும் கொல்லவென்றாலும் என் மனது இடந்தரவில்லை. ஆயினும், இவர்களை கொண்டுசென்று காட்டில் விட்டு விடலாம் பிறகு அவர்கள் கதி எவ்விதமேனுமாகட்டும்.

[சிமியோன் போகிறார்.]

சீன்:—23.] [இடம்:—மலைபடர்ந்தகாடு.

கதாநாயகர்:—ஞானசவுந்தரி, ஞானசவுந்தரியின் குழந்தைகள், தேவமாதா ?

[ஞானசவுந்தரி இருகுழந்தைகளுடன் புலம்பிக்கொண்டிருக்கிருள்.]

ஞானசவுந்தரி கண்ணி.

ஐயோநான் என்னசெய்வேன் என்றமெட்டு

பாவியிலும் பாவியான் பாதகி சண்டாளி
பாருலகிலேன் பிறந்தேன் விதியே என்விதியே என்விதியே பா
இரண்டு குழந்தைகளே பின்னும் யான் பாவியானேன்
என்ன பிழைகள் செய்தேன் விதியே என்விதியே என்விதியே பா
குற்றம் யான் செய்ததில்லை கணவன் சொல்மீறவில்லை
கானகத்திலேயேனை விட்டார் விதியே என்விதியே என்விதியே பா
குழந்தைகள் பசியாலே கோவென்றலறுதையோ
குறையை யகற்றுவோர்யாரோ விதியே என்விதியே என்விதியே பா

ஞானம். வ-ம்:—ஆ ! அன்னையே ! மரியம்மா ! அடியாள் உங்களுக்கு யென்னகுறை செய்தேன் ? ஐயோ ! என்னுதன் என்னை இதுவரையில் அதிக செல்வாக்குடன் வளர்த்து, பிறகு எனைவரித்து இரு குழந்தைகளேயும் பின்ற சேதியறிந்து என்னையும் என்குழந்தைகளேயும் காட்டிவிட்டு வரும்படி விகிதம் அனுப்பியுள்ளாரோ ? ஐயோ! யானுயினும் எக்கதியடையவும் சித்தமாக இருக்கின்றேன், சிறுபாலர்கள் பசியின் கொடுமையினல் சிரவிட்டு அழுகின்றார்களே?எதேனும் கனிவர்க்கங்கள் பறித்தேனும் இவர்களின் பசியினைத் தணிக்கச் செய்யலா மென்றுலோ இருகால்களுமில்லை, என்னசெய்வேன்? ஆ! தேவமாதா ! யான் யாரைதான் கோவதில் பயன்யாது ?

ஞானசவுந்தரி தரு.

ஏழை என்மேல் பழிசுமத்துரீர் என்ற மெட்டு.

எல்லா வல்ல இறைவனருளே
எக்குதே கெஞ்சமே
தேக்குறேன் கொஞ்சமே
எதுங்கதியே யில்லாமல் பேதையான் வருந்துகிறேன் எ

[தேவமாதா ப்ராப்த்தம்.]

தேவ. வ-ம்:—குழந்தாய் ! நீ யாதொன்றுக்கும் அஞ்சாதே ! இதுவும் உனது சிற்றன்னையின் சூதேயாகும், இதோ பழையபடி கால்களை வளரச்செய்தேன், கூடியசிக்கிரம் உனதுநாதன் உன்னைத் தேடிவந்து அழைத்துச் செல்வான் அஞ்சாதே. சுகமாக இரு.

[ஞானசவுந்தரிக்கு பழையபடி கரங்கள் வளர்ந்து வருகின்றது பிலேந்திரன் ஆரண்மனைக்கு வந்து விசாரித்து ஞானசவுந்திரியை தேடிவருகிறான்.]

பிலேந். வ-ம்:—ஹா! சர்வேஸ்வரா! இக்கதிக்கு யானென்ன செய்வேன். ஆ! அதோயாரோ ஒருபெண் இருகுழந்தைகளை ஏந்திய வண்ணம் புலம்பிக்கொண்டிருக்கிறாள். அவளை உற்றுநோக்கில் எனது மனைவியாகிய ஞானசவுந்தரிபோலவே தோற்றுகின்றது. எனது கண்மணியாகிய ஞானசவுந்தரிக்கு இருகரங்களு மில்லையே அம்மங்கை இருகரத்துடனே விளங்குகின்றாளே எல்லாம் அருகில் சென்று கவனிப்போம்.

[பிலேந்திரன் அருகில்வந்து மனைவியென அறிந்து மனைவிமக்களுடன் உரோமபுரிக்கேகி தர்மராஜன் தன்மகனென அறிந்து பிலேந்திரனுக்கு தனது நகரை மகுடாபிஷேகம் செய்கின்றான்.]

வாழி விருத்தம்.

தன்மைசேர் தேவமாதா தனையனே ஏசு நாதன்வாழி
அன்புடனிதை நடத்தும் ஆக்டர்கள் செழித்துவாழி
இன்பமாய் கவியிசைக்கும் எழில்மிகபா லர்கள்வாழி
இந்நூலை எழுதிவைத்த அன்பன்தியாக ராஜன்வாழிவாழி

டிராமா முடிவுபெற்றது.

செல்வரங்கன் பிரஸ், சென்னை.